Free Circulation Germany- England
மணி: 73 - ஓசை: 323 ஆவணி. August. 2023

# வெற்றிமணி

Vettimaniy

ESTD 1950

29 TH years IN EUROPE Successful Publishing

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch Textilien & Schmuck

33 ஆவது ஆண்டு நிறைவு

தரமும், மலிவும், ஒரே இடத்தில்



Königswall 16 (Am Hbf) 44137 Dortmund | Tel:0231 162377

# தோடரும் புதைகுழி மர்மங்கள்

## சங்கிலி, மன்னன் வீழ்ந்த காலத்திலிருந்து எங்கள் இனம் ஒடிக்கொண்டிருக்கின்றது

கலாநிதி ஆறு திருமுருகன்

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி

தமிழர் தகவலின் இவ்வாண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது சர்வதேச புகழ்பெற்ற எழுத்தாளர் திரு.அ.முத்துலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.



சிவாஜியை நேர்கண்ட ஜெயலலிதா



AI

யேர்மனியில் மேசைப்பந்தாட்டத்தில் தடம்பதிக்கும் சிறுவர்கள்!





## ஒரு ராணியைப் போல...



கவிதா லட்சுமி - நோர்வே







# கவுணாவத்தை ஆடும் காக்கைதீவு இராலும்!



எத்தனை நாட்களிற்குத்தான் கற்பில் சிறந்தவள் கண்ணகியா!, மாதவியா! என்று பட்டி மன்றம் நடத்துவது.

நான் கிடாய்க்குட்டி, நான் பிறந்த நாள் முதல் எனக்கு கொண்டாட்டம் தான். மறியாடு பசியில் கத்த,எனக்கு பசி அடங்கியபின்னும், தீத்தோ தீத்தென்று உணவு தீத்துவார்கள். சொந்தப்பிள்ளைக்கோ ஒருவாய் கையில் அள்ளி தீத்திவிட வக்கில்லை, 'உனக்கு எல்லாம் கை இருக்கு தானே எடுத்து ஊட்ட வேண்டுமோ!' என்று பிள்ளைக்குப் பேச்சு.

கிடாய் நான் மொள மொள என வளர்ந்து, மாப்பிளை போல வந்திட்டேன். கேட்காமலே எனக்கு மறைவாக வைத்து சாராயமும் பருக்குவினம். குஷி என்றால் அப்படி ஒரு குஷி தான். எந்த மறியாட்டையும் மறிக்கவிடமாட்டினம். மாப்பிள்ளை போல வளர்ந்திட்டேன், இளமையின் சுகம் சுத்தமாய் எதுவும் இல்லை.

பண்ணையைச்சுற்றி யாழ்ப்பாணத்தில் இரால் வளர்ப்பு. இன்று என்மீதுதான் கரிசனை. எம் மூதாதையர் வாழ்ந்த இலங்கையினுடைய அரசே எம்மை கைவிட எங்கோ இருந்து வந்த சீனாக்காரன் அக்கறை கொண்டு எம் இனம் அதுதான் 'இரால்' தங்கள் நாட்டு சனத்தொகையை மிஞ்சும் வண்ணம் வளர வேண்டுமென எம்மை தத்தெடுத்து வளர்க்கிறான். அதனை பெரிது படுத்த அடிக்கடி எம்மைச் சந்திக்கவும் வாறான். நாம் பெருகவேண்டும் என்று எல்லாச் சுகங்களையும் தேடி ஓடித்திரியாதபடி குறுகிய இடத்தில் கிடைக்கும் வண்ணம் பார்த்துப் பார்த்து வளர்க்கிறான்.

நல்ல காலம் ஒரு கிடாவாக பிறக்கவில்லை என்ற ஒரு வித பெருமிதம் வேறு இராலுக்கு. கிடாவுக்கு மரியாதை தலைக்கு மேல் போக மாலை போட்டு அழைத்து கோவிலுக்கு கூட்டி போகினம். விடிய எதோ வேள்வியாம்!. இரவு முழுவதும் ஒரு நாளும் நெருங்க விடாத பல மறியாடுகளை கண்ணுக்கு முன்னே சுயம்வரம் போல வலம் வர வைத்தினம். சுகம் அப்பதான் முதல் முதலாக கிடைச்சுது. அந்த சுகத்துக்காக உசிரையே விடலாம் என்று மகிழ்ந்த நேரம், இருவர் தலையை இழுத்து, பிடிக்க ஓரே வெட்டில் உண்மையா உசிரே போய்டுது. இரால் நமக்கு என்ன ஓரே குஷி என்று சுருண்டு, திரண்டு வளர்ந்து விட்டோம் என்று எண்ணும் வேளை, எமக்கு மேலே வலை ஒன்று வந்து விழுந்தது. அவ்வளவுதான், எங்கட குஷி குடும்பமே துடிக்க துடிக்க, கடலுக்கு மேல் மூச்சுவிட ஏலாது மாண்டோம். ஏலம் காக்கைதீவில் நடந்தது.

என்ன மனிசரின்ர ஆவிதான் பேசுமோ! இப்ப நாமும் ஆவி தானே. நாமும் பேசுவோம். கடலில் இருந்து வந்தாலும், தரையில் இருந்து வந்தாலும் இப்ப பேசலாம்.

கிடாய் வெட்டி ஒரு பந்தியே நடக்குது. இன்னொரு பக்கம் ஒருவர் இருந்து எம்மை பொரிச்சு வெளுத்து வாங்குகிறார். எங்கட வாசம் சுப்பராம். தமிழன் தமிழ் தமிழ் என்று சாவான். சந்தோஷம் வந்தால் 'சுப்பர்' என்றுதான் சொல்லுவான்.

அப்பதான் திருமண வீட்டுக்கு அவர்களுக்கு நெருங்கிய ஒரு பட்டிமன்ற நடுவர் வந்தார். இப்ப கிடா என்ன இரால் என்ன, ஆவி என்றால் இனி இருவரும் ஒன்றுதானே. என்றாலும் பழசை 8 நாட்கள் மறக்க மாட்டோமாம். யார் சொன்னது. இப்ப வந்த மனிதனின் ஆவி ஒன்று சொன்னது. உண்மை தான் ஆவி என்றால் இப்ப எல்லாம் ஆவி தானே. எனவே எமக்கும் அது பொருந்தும்.

எனவே இப்போ பட்டி மன்ற தலைவரிடம் சென்று, இரால் "என்னைக் கொன்று உண்பது பாவமா!" எனக் கேட்டது. முற்பிறப்பில கிடாயும் சும்மா விடுவதாய் இல்லை. அதுவும் "என்னைக் கொன்றதும் பாவம் அல்லவா!" எனக்கேட்டது.

பட்டிமன்ற நடுவர் சிறிது யோசித்து விட்டு, ஒரு கையில் ஒர் பிடி ஆட்டிறைச்சியை எடுத்து சோற்றோடு பிரட்டி அடித்துவிட்டு, மறு வாய்க்கு இரால் பொரியலை கொஞ்சம் எடுத்து புரட்டி கடித்துவிட்டு அந்த சுவையுடன் தீர்ப்பு சொன்னார்.

"இராலை கொன்றதுதான் பாவம்"

என்றார். ஆடு கோபத்தோடு "இது என்ன தீர்ப்பு!" என்றது. "ஒரு ஆடு உயிரைக் கொடுத்ததில் நாலு பந்தியில் நாற்பது பேர் சாப்பிடுகிறார்கள்.

40 குட்டி இரால்கள் நீ எல்லாம் உசிரை கொடுத்தும் ஒருத்தன் வயிறுதான் நிறையுது. ஒரு ஆடு சாகலாம், பல பேர் உண்ணுவினம். அதனால் இரால்தான் பாவம், பல இரால்கள் சாகவேண்டும் ஒரு ஆள் உண்பதற்கு.

என் தீர்ப்புக்கு இதுவே காரணம்" என்றார்.

"யாரடா உப்படி தீர்ப்பு சொன்ன பட்டிமன்ற நடுவர்?"

என ஆட்டின் ஆவி ஆக்கிரோஷமாய் கத்த, பக்கத்தில இப்பதான் வந்த புது ஆவி சொன்னது, "அவர் பட்டிமன்ற நடுவர் மட்டும் இல்லை, அவன் என்ர சிறந்த மாணவன். எக்கனமிக்ஸில் அவன் மாநிலத்தில தங்கப்பதக்கம் எடுத்தவன்" என்றது.

ஆவியாய் வந்தாலும் நம்மட குரோதங்கள் கொஞ்சம் ஆற நாட்கள் போகுமாக்கும். "எட்டு நாள், எட்டு நாள்""பக்கத்தில் நின்ற ஆவி போட்டுக் கொடுத்தது.



● மாதவி


தீர்ப்பைக் கேட்ட பக்கத்தில் நின்ற ஒரு ஆவி தனக்குள் "ஒரு உயிர் பெரிய உடம்பு என்றால் பாவமில்லை அப்படி என்றால் நான் பாவமில்லை" என்றபடி முணு முணுத்துக்கொண்டு சென்றது. அது இன்னும் எட்டு நாட்களுக்கு தன்னை யானை என்று நினைவு வைத்துக்கொள்ளும்.




வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 323


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276




# தொடரும் புதைகுழி மாமங்கள்






இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி


இறுதிப் போர் நடைபெற்ற முள்ளிவாய்காலின் அருகே மீண்டும் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல இடங்களில் புதைகுழிகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தை இந்தச் சம்பவம் ஏற்படுத்தியிருக்கின்றது. முல்லைதீவில் இராணுவம் ஆக்கிரமித்துள்ள பல பகுதிகளில் விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன. புதைகுழிகளை மூடிமறைப்பதற்காக இந்த விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை வடமாகாண முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் வெளிப்படுத்தியிருக்கின்றார். அதேபோல மண்டைதீவில் கொல்லப்பட்ட பலர் அங்குள்ள ஒரு கிணற்றுக்குள் புதைக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக்கின்றார்.

கொக்குத் தொடுவாயில் ஜூலை முற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியிலிருந்து 13 பேருடைய சிதைவுகள் மீட்கப்பட்டுள்ள நிலையிலேயே, புதைகுழி விவகாரம் மீண்டும் சூடுபிடித்துள்ளது. அங்கு காணப்பட்ட உடைகள் மற்றும் எலும்புகளின் பாகங்களின் அடிப்படையில் இவை பெண் போராளிகளுடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இறுதிப்போரின்போது சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட பெண் போராளிகள் கொல்லப்பட்டு இந்தப் புதைகுழியில் போடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்த புதைகுழிகளின் பின்னணியில் மறைந்திருக்கும் உண்மைகளைக் கண்டறிய வேண்டுமாயின் சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்பது தமிழர் தரப்பால் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. அதேவேளையில், விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வுகளும் அவசியம். அவ்வாறில்லாமல் முன்னெடுக்கப்படக்கூடிய விசாரணைகள் உண்மைகளை வெளிக்கொணர உதவப்போவதில்லை.

இறுதிப் போர் இடம்பெற்ற காலப்பகுதியில்தான் இவர்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது பொதுவான கருத்து. இறுதிப் போரில் இடம்பெற்றது ஒரு இனப்படுகொலை என்பதைத்தான் சர்வதேச அரங்கில் தமிழர் தரப்பு வலியுறுத்திவருகின்றது. அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களில் ஒன்றாக இது போன்ற புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் உதவலாம். நீதிமன்ற விசாரணைகள் மூலமாக மட்டும் நீதியை நிலைநாட்டிவிட முடியாது. கடந்த கால உதாரணங்கள் இதனைத்தான் உணர்த்துகின்றன.

இறுதிப் போரின் போது சரணடைந்த, கைது செய்யப்பட்ட பெருந்தொகையான பொதுமக்களும், போராளிகளும் காணாமல் ஆக்கப்பட்டார்கள். இவ்வாறு படையினரால் கொண்டு செல்லப்பட்டு இன்னும் திரும்பி வராதவர்களை அவர்களுடைய உறவினர்கள் இப்போதும் தேடிவருகின்றார்கள். அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவா்களுடைய புதைகுழியாக இது இருக்கலாம் என்பதுதான் இன்று எழும் சந்தேகம்.

இலங்கை அரசாங்கத்தினால் இந்தப் புதைகுழிகள் தோண்டப்படுவதும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதும் கொல்லப்பட்டவர்களுக்கு ஒரு போதும் நீதியைப் பெற்றுத்தராது என்பதும் அனைவருக்கும் தெரியும். இதற்கு கடந்தகால அனுபவங்களும் சான்றாக உள்ளன. மிருசுவிலில் எட்டு பொதுமக்களுடைய படுகொலைகள். திருமலை குமாரபுரத்தில் 26 பொதுமக்களுடைய படுகொலைகள் யாரால் செய்யப்பட்டன என்பது தெரிந்திருந்தும்கூட, நீதி நிலைநாட்டப்படவில்லை.

இராணுவ ஆக்கிரமிப்பையடுத்து மிருசுவிலிலிருந்து உடுப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த சில அகதிகள் தமது வீடுகளையும், உடமைகளையும் பார்ப்பதற்காகவும் அங்குள்ள காட்டில் விறகு வெட்டி வரவும் உள்ளூர் அதிகாரிகளிடம் இருந்து அனுமதி பெற்று 2000 டிசம்பா் 19 ஆம் திகதி மிருசுவிலுக்குச் சென்ற வேளை அரைகுறையாக புதையுண்ட நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலத்தை கண்டனர். அவர்களுள் சிலர் தமது குடும்பத்தவர்களுடன் இத் தகவலை பகிர்ந்து கொண்டுமிருந்தனர். அடுத்த நாள் அதே பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை அடையாளங் காண முற்பட்டவேளை அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள்.

இவர்களுள் எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள வீடு ஒன்றின் மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டனர். கைதானவர்களில் பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் பலத்த காயங்களுடன் தப்பி வந்து தனது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததை அடுத்தே இக்கொலைகள் பற்றிய விபரங்கள் தெரியவந்தது. அவர் வழங்கிய தகவலிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூட குழியிலிருந்து மீட்கப்பட்டன.

எட்டு தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இராணுவச் சிப்பாய் சுனில் ரத்னநாயக்க என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் 2015 ஜூன் 25 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த நான்கு இராணுவத்தினரை போதிய ஆதாரமின்மையால் விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். மரண தண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்திநாயக்கவை 2020 மார்ச் 26 இல் கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பளித்து விடுதலை செய்தார்.

திருமலை, குமாரபுரம் கிராமத்தில் கடந்த 1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி இலங்கை இராணுவம் மற்றும் துணைப் படைகள் மேற்கொண்ட படுகொலை சம்பவத்தில் பெண்கள் குழந்தைகள் உட்பட 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், 36 பேர்வரை படுகாயமடைந்தனர்.

26 ஆம் பக்கத் தொடர்ச்சி...






# எப்போதும் ஊடகம் போது மக்களின் கைகளுக்குச் சென்றுவிடக்கூடாது!



விக்கி விக்னேஷ் (இலங்கை)

மத துறவிகளுக்கும் தனியுரிமை உண்டு என்று சொல்லி அவர்களது பாலியல் சேட்டையை ஆமோதிக்கும் வகையில் புரட்சி செய்வதை எல்லாம் எவ்விதமான மன நிலையாகக் கருதுவதோ தெரியவில்லை. அனைத்து மனிதர்களுக்கும் தனியுரிமை உண்டு.

மத குருமாராக இருந்தாலும் அவர்கள் துறவிகள் என தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் பட்சத்தில் (இந்துவோ பௌத்தமோ என்னவோ) அவர்கள் பாலியல் சேட்டைகளையும் தவிர்க்கத்தான் வேண்டும்.அதிலும் நாட்டம் செல்கிறது என்றால் துறவு நிலையைத் துறக்க வேண்டும். துறைவிகளின் இந்த இரட்டை வேடம் இந்து பௌத்த மதங்களில் மட்டுமில்லை. எல்லா மதங்களின் பெயரிலும் ஆங்காங்கே இடம்பெறுகின்றன.

அவுஸ்திரேலிய கத்தோலிக்க திருச்சபையில் இடம்பெற்ற விவகாரம் ஒரு உதாரணம்:

இப்படியானவர்களைப் பிடித்துக் கொடுப்பது பிழையில்லை. ஆனால் குற்றவாளியாகவே இருந்தாலும், அவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.அவர்கள் முறையாக நடத்தப்பட வேண்டும். பிடித்துக் கொடுத்து ஆதாரங்களை வசப்படுத்திக் கொள்வதோடு நின்றிருக்க வேண்டும்.பிடித்துக் கொடுத்தவரைக்கும் காணொளியாக வெளியிட்டிருக்கலாம்.

மீத அந்தரங்கத்தையும் பகிரங்கப் படுத்தியதும், அந்தப் பெண்களை இழிவுபடுத்தி நிர்வாணப்படுத்திப் படம் பிடிப்பதெல்லாம் அத்துமீறல். ஒருவேளை அந்தப்பெண்கள் அச்சுறுத்தப்பட்டு அங்கு வரவழைக்கப் பட்டவர்களாக இருந்தால்? இந்த வெளிப் படுத்தலுக்குப் பின்னர் அவர்களுக்கு எப்படி நியாயம் வழங்க முடியும்?

எந்தவொரு பெண்ணுக்கும் அந்த துறவியை மயக்கி உடலுறவு கொள்ள வேண்டும் என்ற தேவை இருக்கும் என நான் கருதவில்லை.

இங்குதான் ஒரு விடயம் பறைசாற்றப்படுகிறது. எப்போதும் “ஊடகம்” பொது மக்களின் கைகளுக்குச் சென்றுவிடக்கூடாது என்பதுதான் அது. பொதுமக்கள் உணர்வுகளோடு ஒன்றித்து வாழ்பவர்கள். வெளியிடும் போது எதனைத் தவிர்க்க வேண்டும், அது எந்தளவுக்கு இன்னொருவர் உரிமையைப் பாதிக்கிறது போன்ற எதனையும் அந்த நிகழ் களத்தில் இருக்கும் யாருக்கும் புரிவதில்லை.

ஆனால் ஊடகங்கள் நியாயமாக, தர்மமாக நடந்துகொள்ளும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்திருந்தால் அவர்கள் ஏன் இந்த பணிகளை அவர்கள் கைகளில் எடுத்துக்கொள்ளப்போகிறார்கள்? இது ஊடக கட்டுப்பாடு அல்ல, ஊடக ஒழுக்கம். எனவேதான் சமூக ஊடகங்கள் ஒருபக்கம் மிகப்பெரிய வரப்பிரசாதமாகப் பார்க்கப்பட்டாலும், இன்னொரு பக்கம் மாபெரும் ஆபத்து என்றும் சொல்லப்படுகிறது. அது ஒரு வரைமுறைக்குள் கொண்டு செல்லப்பட வேண்டுமா இல்லையா என்பதில் எனக்கும் இன்னும் தெளிவில்லை. ஆனால் சமூக ஊடகத்தை ஒழுக்கத்தோடு கையாளும் இயலுமை, தெளிவு எல்லோரிடமும் இல்லை என்பதில் நான் தெளிவாக இருக்கிறேன்.

# இது போட்டிக்கு உரியது அல்ல போற்றுதலுக்கு உரியது

## kalaivilakku tv




1991

அக்காலத்தில் யேர்மனியில் நீண்டகாலம் கலைவிளக்கு சஞ்சிகையை, கலைப் பட்டதாரிகளான திரு. சு.பாக்கியநாதன் அவர்களும், அவரது மனைவி விக்னா. பாக்கியநாதன் அவர்களும் இணைந்து வெளியிட்டுவந்தனர்.

காலத்தை நாடி பிடித்து பார்ப்பதில் வல்லவர் கலைவிளக்கு திரு.சு.பாக்கியநாதன் அவர்கள். ஏக்நாத் வீடியோ சஞ்சிகை தமிழ் நாட்டில் இருந்து உலகெங்கும் வந்தாலும், எமது கலைகள் பண்பாடுகள், ஈழத்தமிழர்களின் வாழ்க்கை முறைகளுக்கு ஈடாக அமைந்ததாக அதனைக் கூற முடியாது.



திரு சு.பாக்கியநாதன் அவர்கள் இதனைப்புரிந்து கொண்டு. யேர்மனியில், எம்மவர்கள் திறமைகளையும், எமது பண்பாட்டு நிகழ்வுகளையும், தென்னிந்திய, சினிமா, நாடகங்கள் இவற்றையும் எமக்கு ஏற்றவாறு பகுத்து தொகுத்து சிறப்பாக கலைவிளக்கு வீடியோ சஞ்சிகையை வெளியிட்டார்.

குறுகிய காலத்திலேயே அது பிரபலமானது. அதற்கான சேகரிபபுக்கள் அந்த அந்த காலகட்டத்தில் அருமையாக அமைந்தும் இருந்தது.ஒளி வடிவில் அவை யாவும் பொக்கிசமாக இன்றும் அவரிடம் உள்ளது.

அவற்றை இளையவர்கள் பார்க்கவும், முதியவர்கள் இரைமீட்கவும், உதவும் வண்ணம் தற்போது கலைவிளக்கு ரிவி ஒன்றை யூரிப்பில் ஆரம்பித்து உள்ளார்.

யேர்மனியில் எமது வாழ்வின் வேர்களை அறிய அவசியம் பார்க்கவேண்டியது கலைவிளக்கு ரிவி என்றால் மிகையாகது. இது போட்டிக்கு உரியது அல்ல போற்றுதலுக்கு உரியது.

மாதவி (யேர்மனி)








# எங்கடை ஆச்சி

காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

## அஞ்சாம் வகுப்பு சோதினை பெயிலானவன் எல்லாம் அலைஞ்சா திரியப் போகினம்?

**1974 ம்** ஆண்டு ஒருநாள் சனிக்கிழமை வழக்கம் போல வெள்ளணக் காலமை நித்திரையால எழும்பி வளவுக்குப் போய் வந்து கைகால் முகம் எல்லாம் கழுவி சாமி கும்பிட்டுப் போட்டு ஆட்டட்டி மாட்டடி எல்லாம் துப்பரவாக்கிபோட்டு கோப்பி குடிக்க எண்டு அடுக்களைக்குப் போனன். ஒவ்வொரு நாளும் ஆச்சி மணக்க மணக்க வேர்க் கொம்பும் போட்டு ஆட்டுப்பாலிலை கோப்பி ஊத்துவா. அப்ப எங்களிட்டை நிண்ட தங்கம்மா எண்ட ஆடு ஆச்சி எப்ப



போய் மடியைத் தொட்டாலும் சுண்டுக் கோப்பை நிறையப் பால் தரும். ஆச்சி ஊத்திற உந்தக் கோப்பியைக் குடிச்சா உடம்பிலை புதுசா ஒரு தெம்பு வரும். அப்பிடி அண்டைக்கும் கோப்பி குடிக்க எண்டு போக வழக்கத்துக்கு மாறா தம்பி போய் குளிச்சுப் போட்டு வாடா எண்டு ஆச்சி சொன்னா.

ஏனணை ஆச்சி இண்டைக்கு சனிக் கிழமைதானே வழக்கமா நான் பத்து மணிக்குத்தானே எண்ணை வைச்சு முழுகிறனான். பேந்து இண்டைக்கு என்னத்துக்கு ஒரு புதிவிதமா என்னை விடிய நேரத்தோட குளிக்கச் சொல்லிறியள் எண்டன். உடனை ஆச்சி எடே இண்டைக்கு இஸ்கொலர்சிப்பு சோதினை இருக்கு போய் எழுதிப் போட்டு வா எண்டு சொன்னா . அப்பதான் எனக்குத் தெரியும் அப்பிடி ஒரு சோதினை அண்டைக்கு எனக்கு இருக்கெண்டு.

பேந்து வெள்ளிக்கிழமை பள்ளிக் கத்துக்குப் போட்டுப் போட்டு தோய்க்க வெண்டு கொடியில கழட்டிபோட்ட காச்சட்டை சட்டையைப் போட்டுக் கொண்டு தீட்டாத பென்சிலும் ரேசரும் செத்தையிலை செருகிக் கிடந்த பழைய மெய்கண்டான் கலண்டர் மட்டையும் எடுத்துக் கொண்டு காலுக்கு செருப்பும் போடாமல் போய் ஒரு மாதிரி சோதினை எழுதிப் போட்டு வந்தனான். என்னோடை ஆச்சியோ அப்புவோ பின்னாலை வால் பிடிச்சுக்கொண்டும் வரேல்லை கண்டகிண்டபடி ஒண்டும் அலட்டவும் இல்லை. எண்டாலும் ஆச்சி போகேக்கை மோனை கவனம் இஞ்சுப்பெற்றர் வந்தால் சலாம் குண்டுமணி சொல்லவேணும் எண்டு வழிக்கு வழி சொல்லி அனுப்பினா. சோதினை செய்து போட்டு வந்த பிறகு ஆச்சி அந்தக் கேள்வி செய்த னியே இந்தக் கேள்வி செய்தனியே எண்டு அரியண்டப்படுத்தவும் இல்லை.



அயலட்டையிலை உள்ள பெண்டுகளிட்டைப் போய் உன்ரை பெடி சோதினை வடிவாச் செய்ததோ உன்ரை பெட்டை சோதினை வடிவாச் செய்ததோ எண்டு அலட்டவும் இல்லை. அவ தன்ரை பாடு நான் என்ரை பாடு .

பேந்து ஒரு மூண்டு மாதம் கழிச்சு ரிசல்ட் வந்தால் நான் பெயில் ஆனால் எங்கட வகுப்பில ரெண்டு மூண்டு பேர் பாஸ் பண்ணிப் போட்டினம். நான் பெயில் எண்டு நானும் கவலைப்படேல்லை. அம்மாவும் கவலைப்படேல்லை, ஆச்சியும் கவலைப்படேல்லை. அயலட்டையில உள்ள ஆக்களும் அதைப் பற்றி ஒண்டும் விண்ணாயம் கேக்கேல்லை. வகுப்பில ரீச்சர்மாரும் ஒண்டும் கேக்கேல்லை. அவை பாஸ் பண்ணின பெடியளை தூக்கிவைச்சு கதைக்கவும் இல்லை விழாக் கொண்டாடவும் இல்லை.பெயில் பண்ணின என்னைப் போல பெடியளை குறைவாயும் கதைக்கேல்லை.

பேந்து நான் ஆப்பிடியே ஓ எல் படிச்சு பெஸ்ற்றிசல்ட் எடுத்து அதுக்குப்பிறகு ஏ எல் படிச்சு பெஸ்ற் ரிசல்ட் எடுத்து கம்பஸ் போய் அதுக்குப் பிறகு இன்னும் மேல மேல அதையும் இதையும் எண்டு அந்தக் கம்பஸ் மாறி இந்தக் கம்பஸ் மாறி படிச்சு இந்த நாட்டின்ரை கல்வித்துறை சார்ந்து பல முடிவுகளை எடுக்கக் கூடிய நிலமைக்கு எல்லாம் போனனான்.அதே நேரம் என்னோட படிச்சு உந்தச் சோதினை பாஸ் பண்ணினவங்கள் இப்ப எங்க இருக்கிறாங்கள் எண்டே தெரியேல்லை.

நீதி:அஞ்சாம் வகுப்பு சோதினை பாஸ் பண்ணினவன் எல்லாம் அரசாளப் போவதுமில்லை அதே சோதினை பெயிலானவன் எல்லாம் அலைஞ்சு திரியப் போவதுமில்லை.






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Luckyfly
Lucky Fly Reisebüro
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
2023
EARLY BOOKING OFFER
QATAR
என்றும் குறைந்த விலையில் உங்கள் பயணங்கள் அமைய நாடுங்கள்.
September 2023
Frankfurt - Colombo
Ab 789 Euro
e.mail: info@L-Fly.de | www.L-fly.de
SriLankan
QATAR AIRWAYS
Emirates
Gulf Air
Mob: 0179 1484 892 | Tel:0234 23 990 32 | Fax: 0234 7945 7171
Essener Str.26 44793 Bochum-Germany



# ஆடம்பரத் திருமணங்கள்

ஒருகாலகட்டம்வரையில் ஆடம்பரம் என்பது ஒரு சமூக குற்றமாகவே கருதப்பட்டது. ஆனால் இன்றோ, ஆடம்பரம் யார் மனதையும் உறுத்துவதாகத் தெரியவில்லை. தினம், தினம் பல ஆடம்பரத் திருமணங்களை சமூகம் பார்த்துப்பார்த்து, அவை இயல்பான ஒன்றாகிவிட்டது. இதனால்தானோ என்னவோ, இன்று திருமணத்திற்கு தயாராகிக்கொண்டிருக்கும் பலரது (குறிப்பாக மணமகளாக மாறவிருக்கும் பெண்களுக்கு) எண்ணமும் நாமும் ஆடம்பரமாக திருமணம் செய்து கொள்ளவேண்டும் எனும் ஆசை அதன் பின்விளைவுகளை அறியாமலேயே ஏற்பட்டு விடுகின்றது .

திருமண நாளை ஒரு மறக்க முடியாத ஆடம்பரக் கொண்டாட்டமாக மாற்றுவதற்கு, மண்டபம், பிரம்மாண்ட விருந்து, மலைக்க வைக்கும் மேடை அலங்காரம், விலைகூடிய அழைப்பிதழ்கள், உடைகள், நகைகள், கேளிக்கை நிகழ்வுகள் என எதையும் விட்டு வைப்பதில்லை. போதாக்குறைக்கு சம்பந்தமேயில்லாமல் அண்மைக்காலமாக நம்முடைய பாரம்பரிய திருமணங்களுக்குள் புகுத்தப்பட்டிருக்கும் வடநாட்டு ஆடை அலங்காரங்கள் உற்பட, சங்கீர், மெகந்தி என பலவகையான மேலதிக கொண்டாட்டங்கள் என்பவற்றையும் குறிப்பிட்டேயாகவேண்டும். இந்த ஒரு நாள் கொண்டாட்டத்திற்கு செய்யும் செலவில் ஒரு சொந்த வீட்டையே வாங்கி விடமுடியும்!

ஆடம்பர திருமண மோகமானது, நிறைய நடுத்தர குடும்பங்களை மீளா கடனில் தள்ளி,வாழ்க்கையை சுமையாக மாற்றியுள்ளது.வாழ்வில் ஒருமுறை நடக்கும் திருமணம் பலரின் வாழ்வில் பெரும் கடன் சுமையைக் கொண்டு வரும் ஒன்றாக இருக்கிறது என்பது மறுக்கமுடியாத யதார்த்தமாக உள்ளது. ஊர் கூடி,உறவுகள் கூடி மகிழும் கல்யாணம் உறவுகளையும்,நட்பு வட்டாரத்தையும் பலப்படுத்துவதற்கு பதிலாக ஊரின் முன் பணபலத்தை நிரூபிக்கும் விதமாக இருக்கின்றன. திருமணங்கள் உறவுகளின் ஒற்றுமை அடையாளமாக இருந்த காலமெல்லாம் கடந்து வீண் செலவுகளும்,ஆடம்பரமும் காண்பிக்கும் சமூக அந்தஸ்திற்கான அடையாளமாக திசை திருப்பி விட்டன. யானையைப் பார்த்து பூனை போட்டி போட்ட கதையாக பணக்கார சமூகம் செய்யும் விரயம் போல நடுத்தர மக்களும் கல்யாணச் செலவுகள் செய்யும் போது கல்யாணக் கடன்கள் அவர்களை காணாமல் போக வைக்கின்றன.

திருமண செலவுகளைக் கேட்டால் மயக்கமே வரும் அளவிற்கு இருக்கிறது. திருமண மண்டபத்திற்கான நாளொன்றிற்கான வாடகை இன்று பல இலட்சங்களை தாண்டியுள்ளது . அதிலும் நற்சத்திர விடுதிகள் என்றால் சொல்லவே வேண்டாம். மண்டபங்களின் வாடகை, சாப்பாட்டுச் செலவிற்கு நிகராக அதிகரித்து வருகின்றன.

அதேபோல திருமண அழைப்பிதழ்கள் கல்யாண அழைப்பிதழாக இருப்பதற்கு பதில் பணத்தின் பலத்தை திருமண அழைப்பிதழ்களில் காட்டி வருகின்றனர். ஒரு பத்திரிகையின் விலை ரூ 10 என்றாலும் ரூ. 1000 என்றாலும் கல்யாணத்திற்கு வர வேண்டும் என நினைப்பவர்கள் வரத்தான் போகிறார்கள். இதில் எதற்கு வீண் விரயம்? ஒரு நாள் சில மணி நேரங்கள் கட்டிக்கொள்ளும் கல்யாண பட்டுப் புடவைக்கு லட்சக்கணக்கில் செலவு செய்து அதை மீண்டும் கட்டிக்கொள்ள முடியாமல் பத்திரமாக வீட்டு பீரோவில் தூங்க வைப்பதால் நம் பணமும் தூங்க வைக்கப்படுகிறது என்றுதான் சொல்ல வேண்டும். சேலைகள் மட்டுமல்ல ஆண்கள் அணியும் ஆடம்பர ஆடைகளும் அன்று ஒரு நாள் அணிந்த மாதிரி போட்டோவில்தான் பார்க்க முடியுமே தவிர இதர நாட்களில் அணிய முடியாத நிலையில் இருக்கின்றன. எனவே உடைகள் லட்சணமாக இருந்தால் போதும். பல லட்சத்தில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

நம் விருந்தில் உறவினர்களும் ஊரும் வியக்க வேண்டும் என வகைவகையான உணவுகள் மூலம் சுமார் 15% உணவு உற்பத்தி, திருமணம் போன்ற விழாக்களில் வீணாகக் கொட்டப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முன்பெல்லாம் தோழிகளும்,உறவுகளில் உள்ள பெண்களும் தான் மேக்கப் செய்வார்கள்.இன்றோ திருமணங்களுக்கு மேக்கப் ஸ்பெஷலிஸ்ட்களுக்கு கட்டணமாக சில ஆயிரம் தொடங்கி சில லட்சங்கள் வரை வழங்கப்படுகிறது. அதிலும் நான்கு மாதங்களுக்கு முன்பாகவே பேஷியல் உற்பட அனைத்திற்குமான ஒத்திகைகள் ஆரம்பிக்கப்பட்டு பணம் வாரியிறைக்கபட ஆரம்பித்துவிடும். இது தவிர கல்யாணத்திற்கு வரும் பெண்கள் யார் விரும்பினாலும் அவர்களுக்கு மெகந்தி வைத்துவிட ஒரு மேக்கப் குழுவே களத்தில் இறக்கப்படுகிறது. இதில் pre shooting என்கிற அளப்பறையும் உள்ளடங்கும்.

கடந்த சில ஆண்டுகளில் திருமணங்கள் என்பது மிகப் பெரிய சந்தையாக உருவெடுத்து, ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருகிறது என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். திருமணங்களுக்கான மேட்ரிமோனியல் இணையதளங்கள் தொடங்கி, மேக்-அப், புகைப்படங்கள் மற்றும் வீடியோ, கேட்டரிங் சேவைகள்,




மலர் அலங்காரங்கள், விளக்குகள், நகைகள், ஆடைகள் வாங்குவது, இசை நிகழ்ச்சி நடத்துபவர்கள் என திருமண சந்தை 40-50 பில்லியன் டாலர்கள் மதிப்பிலானது என ஆய்வுகள் கூறுகின்றன. பத்தாண்டுகளுக்கு முன்பு திருமணம் குறித்து முடிவும், திட்டமிடலையும் செய்து வந்தது மனமக்களின் குடும்ப உறுப்பினர்கள்.ஆனால் இப்போது ஒரு திருமண நிகழ்வை முழுமையாக திட்டமிடுவது என்பது மிகப்பெரிய தொழில். திருமண மண்டபம் புக் செய்வதில் தொடங்கி, எந்த மாதிரியான பூக்கள், மண்டபத்திற்குள் எப்படி நுழைய வேண்டும், புகைப்படக் கலைஞர்களை புக் செய்வது, தீம் வெட்டிங்க்ஸ், திருமணத்தில் கலந்து கொள்பவர்களுக்கு ஜுஸ் கொடுப்பது, சுத்தம் செய்ய பணியாளர்களை அமர்த்துவது. திருமண ஆல்பம் வரை அனைத்தையும் ஒருங்கிணைப்பதுதான் வெட்டிங் பிளானர்களின் வேலை. எதையும் திட்டமிட்டு முடிக்கும் அளவிற்கு முன்பைப்போல யாருக்கும் நேரமோ, உறவினர் பலமோ இல்லாததால் இன்று அனேகரது தேர்வு இந்த வெட்டிங் பிளானர்ஸ் தான் என்றாலும் மிகையில்லை.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

உறவுகள்,ஊர் பெருமைக்கு ஆடம்பரம் செய்து திருமணம் நடத்தி கடனில் வாழ்வதைக் காட்டிலும் நம் தகுதிக்கு ஏற்றது போல நம் நிம்மதியைப் பாதிக்காத வகையில் எளிமையாகத் திருமணம் நடத்துவதே புத்திசாலித்தனம். கடன் மரண தணடனையை விட கொடுமையானது. யார் மூலம் கடன் என பின்னாளில் சண்டை போடுவதைக் காட்டிலும் கடன் ஏற்படாமல் சிக்கனமாக வாழ்வது நிரந்தர நிம்மதியைத் தரும்.





# மீண்டும் ஒரு இசை மழை யேர்மனியில் போழிந்தது!



தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர், பாடகர், இசைஞானி இளையராஜா அவர்களின் இசை நிகழ்ச்சி யேர்மனியில் ஒபகவுசன் நகரில் மிகப்பிரமாண்டமான Rudolf Weber Arena மண்டபத்தில் 01.07..2023 சனிக்கிழமை இடம் பெற்றது.

இன்று 60,70,வயதைக் கடந்தவர்கள் மனதோடு பின்னிப்பிணைந்து இருப்பது இசைஞானியின் இசை என்றால் மிகையாகாது.

அன்று தாயகத்தில் நாம் காலை பாடசாலைக்கு செல்லும் வேளைகளில், இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும்,'பொங்கும் பூம்புனல்" கேட்காமல் நகரமாட்டோம். ஒரு பாடல் என்றாலும் கேட்டு விட்டே, வீட்டை விட்டு புறப்படுவோம்.

அது சித்திரைச் செவ்வானம் சிவக்கண்டேன் முத்தான முத்தம்மாவாகவோ, அன்னக்கிளி உன்னைத் தேடு தேயாகவோ, கண்ணன் ஒரு கைக்குழந்தையாகவோ இருக்கலாம். சரி வீட்டில் கேட்கமுடியாது போய்விட்டால் தெருக்கடைகள் கைகொடுக்கும்.

அன்று எல்லாம் இன்று போல் இசையமைப்பாளர்கள், பாடகர்கள் தன் முகம் காட்டாத காலம். எதாவது ஒரு சில திரைப்படங்களில், வந்து 'பசுமைநிறைந்த நினைவுகளே" என்று பாடினால், அல்லது அகத்தியராக வந்து சீர்காழி கோவிந்தராஜன் நடித்தால் மட்டுமே அவர்களைக் காணலாம். அதற்காக அவர்களைக் காண விரும்பவில்லை என்று அர்த்தம் இல்லை. காண்பது அருமை என்றே சொல்கிறேன்.



ஆனால் இன்று தாய் மண்ணில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் இசைக்கலைஞர்கள் நேரில் வந்து மகிழ்வித்து போவதைக் காண்கின்றோம். அவர்கள் காசுக்காக என்றாலும், மகிழ்ச்சி எமதானதே! என நாம் செல்கின்றோம்.மகிழ்கின்றோம்.

கடந்த ஆறு மாதத்தில் மட்டும் யேர்மனியில் ஒரே இடத்தில், ஒரே மண்டபத்தில், மூன்று இசையமைப்பாளர்களது நிகழ்ச்சிகள் பிரமாண்டமாக நடந்து முடிந்தது.

கார்த்திக் இளையராஜா, அனிருத், இப்போ இசைஞானி.

இன்றைய இளைஞர்கள் முதல் நேற்றைய இளைஞர்கள் வரை இவர்களைக் கொண்டாடி மகிழ்ந்தனர். இசைஞானி இளையராஜா வின் இன்னிசை நிகழ்ச்சிக்கு 5000க்கு மேற்பட்ட இரசிகர்கள் கலந்து கொண்டனர்.

வயதான பலருக்கு வாழ்வின் மிகப் பெரும் மகிழ்ச்சி தரும் நிகழ்வாக அமைந்திருக்கும் என்பது, திண்ணம். இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து,ஒருவித சலசலப்பும் அரங்கில் ஏற்படாது,எமது மக்களின் கண்ணியம் காத்த அமைப்பாளர்களுக்கும், (AJ Entertainment presents (Main) Powered by: Tamil.De Event by: Epic Monkeys) ரசிகர்களுக்கும், எமது மகிழ்ச்சியை தெரிவித்தாக வேண்டும்.

தொலைக்காட்சியில் பார்ப்பது வேறு நேரில் கண்டு ரசிப்பது வேறு. மக்கள் நேருக்கு நேர் காண்பது இந்த இளைய தலைமுறையின் இச் செயற்பாடுகளால் அமைகிறது என மகிழ்ச்சி அடைவோம். சூமுக்குள் ( Zoom ) சிறைப்பட்டு இருந்த மக்களுக்கும் சற்றுச் சுதந்திரம் கிடைத்த உணர்வு.

தென்னிந்திய கலைஞர்கள் வருகையால் எமது பணம் விரையமாகிறது, இந்தப் பணத்தை நாட்டுக்கு அனுப்பினால் நாலு சனத்தின்ரை தேவைகள் நிறைவேறும், என்று மனதிற்குள் கதைப்பதும் கேட்கின்றது.

உண்மைதான். ஆனால் அதனையும் செய்யாமல் இருக்கின்றோமா?

எந்த நெருக்கடி காலத்திலும் உதவத் தயங்காத புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களும், சற்று மகிழட்டுமே!

இசையை இரசிப்போம் தனிப்பட்ட அவர்களது பேச்சுக்களை உள்வாங்கி கலங்கத்தேவை இல்லை. இசையை எவரும் திணிப்பது இல்லை. நாமே விரும்பி ஏற்கின்றோம். இசையோடு நிற்போம். ஒவ்வாத பேச்சுக்களை புறம் தள்ளுவோம். தென்னிந்திய திரைப்படத்துறை வணிகம் சார்ந்தது. எமது கலைகளையும் வணிக ரீதியாக வெற்றிபெற உழைப்போம். எத்தனை முறைதான் அவர்கள் வருவார்கள். கவலையை விடவும், நாம் கற்கவும், வெளிக்கொண்டுவரவும் நிறையவே உள்ளது. அதற்கும் இளையவர்கள் கைகொடுப்பார்கள், இது இளையவர் காலம். ராஜாக்களின் காலம் அல்ல. படங்கள யாவும் கோணேஸ்.


**Koness. Photos.**






# தானும் ஒரு 'பாலுமகேந்திரா' எண்ட நினைப்பு!

# கறுப்பு வெள்ளைக் கனாக் காலம்



View finder (வியூ ஃபைண்டர்) க்கால பாத்துக்கொண்டு சரியான அளவுக்கு ஃபிரேமை fix பண்ணீட்டு , கமராவின்டை முன்பக்கம் இருக்கிற பெரிய வட்டத்தை யனதரளவ பண்ணி புள்ளிகள் ஒண்டாகி முகம் கூர்மையாகி வந்திச்சுது. முன்னால இருக்கிற fine focus ஐ உருட்டி சப்பை மூக்கின்டை நுனி தெளிவாத் தெரிஞ்சுது. Konica film roll ISO 200 load பண்ணின Yashica கமராவின்டை அப்ஃபேச்சரை Fiwr;R focal depth ஐ மாத்த பின்னால மரம் மறைஞ்சு முகம் மட்டும் தெரிய எடுத்த portrait ஐ பிரேம் போட்டுக் கொண்டந்து முன் கண்ணாடியைத் துறந்து மாட்டி வைச்சான் தானும் ஒரு பாலுமகேந்திரா எண்ட நினைப்பில, இதைப்பாத்திட்டு படம்



எடுக்க ஆக்கள் கூட வருவினம் எண்டு நம்பிக்கையில். எண்பதுகளில போட்டோக் கடைக்கு போட்டி இல்லாட்டியும் வருமானம் அளவாத் தான் வாறது. எங்கேயும் கலியாண வீடு, விசேசங்கள் எண்டால் மட்டும் நல்ல வருமானம் வரும்.


கடை வாசலில ஒரு கலியாண வீட்டுப் படம், அதே போல Coat போட்ட ரெண்டு பேரின்டை படம் எண்டு கண்ணாடிக் குள்ளால frame ஓட கறுப்பு வெள்ளைப் படம் தொங்கும். முகத்தில போட்ட பவுடர் திட்டுக் கூட தெரியிற அளவு உண்மையான உருவத்தைச் சொல்லிறது கறுப்பு வெள்ளைப் படம் தான்.

முந்தி வசதிக்கு ஏத்த மாதிரி மூண்டு நாலு வருசத்துக்கு ஒருக்கா குடும்பமாப் போய் படம் எடுத்து வைக்கிறது . உயரமான மரயானைக் குட்டீல சாய்ஞ்சு நிண்டபடி ஒவ்வொரு பிள்ளையையும் விட்டு, பிறகு பக்கத்தில ஒரு பெரிய flower vase இருக்க பிள்ளைகளை அணைச்சபடி அம்மாவும் அப்பாவும் ஒரு குடும்ப photo, ஒரு கையில ஒரு handbag ஓட கட்டின சாறீன்டை head piece மற்றக் கையில சரிஞ்சு தொங்க சரோஜாதேவி மாதிரி pose குடுத்தபடி புரோக்கருக்கு குடுக்கிறதுக்கு சித்திக்கும் மாமிக்கும் ஒரு photo, செத்தா கல்வெட்டில போடிறதுக்கு கிழவீன்டை



தனிப்படம் எல்லாம் எடுத்திட்டு வந்த எல்லாரும் அப்பிடியே town இல மிச்ச அலுவலை முடிச்சிட்டுப் போவினம் .

தனிப்படம் எடுத்த ஆள் தவறிப்போனால் அந்திரட்டி வரேக்க படத்தை தேடிப் பிடிச்சு enlarge பண்ணி பிரேம் போட்டு போன ஒழுங்கில தொங்கவிடிறது வீட்டு hallஇல. படத்துக்கு frame போடிறதுக்கு மானிப்பாய் ரோட்டில படயளள house ம் , சத்திரத்துச் சந்தீல பட்டாபி பட மாடமும் தான் இருந்தது . பிறேம் போடாத படங்களை show case இல இருக்கிற photo frame இல சொருகி வைக்கிறது.



எப்பவாவது தூசுதட்டேக்க அலுமாரிக்கு அடியிலிருந்து ஒரு அல்பம் கிடைக்கும். பழைய அல்பம் தடிச்ச மட்டையோட மூலையிலை பித்தளைக் கிளிப் போட்டபடி வெளிக்கவர் இருக்கும். உள்ள பாத்தா கறுப்பு நிறப் பேப்பர். அந்தப் பேப்பரில மட்டையின்டை நடுவில படம் செருக எண்டு வசதியா இருக்கிற முக்கோண மூலைக்களுக்க படத்தை சொருகி வைச்சிருப்பினம். அதோட ரெண்டு பேப்பருக்கிடையில ஒரு ரிசுப் பேப்பர் இருக்கும். கறுப்பு வெள்ளை படம் எண்டாலும் ஒரு பழுப்பு வெள்ளையாத் தான் இருக்கும். இவர் ஆரெண்டு சொல்லு பாப்பம் எண்டு படத்தைக்காட்டி பிறக்கமுதல் செத்துப்போனவையை, இருத்தி வைச்சு அம்மா சொல்லித் தந்ததால முறை தலை எப்பவுமே தெரிஞ்சுது .



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

ஊரில படம் எடுக்க சில கடைகள் தான் எண்பதில இருந்திச்சுது. வெலிங்டன் சந்தீல ஸ்ரான்லி ரோட் பக்கமா சித் திராலயா ஸ்டூடியோ, சந்தியால அப்பிடியே திரும்பிப் போனா ஞானம்ஸ் ஸ்டூடியோ, கொழும்பு ஸ்ரூடியோ கம்பஸ் பக்கமா பேபி ஸ்டூடியோ தான் எனக்கு ஞாபகம்.

சோதினை எடுக்க postal identity card வேணுமாம் எண்டு போட்டு ஸ்டூடியோக்குப் போனன். என்ன சைஸ், எத்தினை கொப்பி எண்டு விபரம் கேட்டிட்டு உள்ள போங்கோ எண்ட, திருப்பியும் உள்ள "அண்ணை postal identity card" எண்டு சொல்ல உள்ள கூட்டிக்கொண்டு போய் இருட்டின அறையின்டை டபைாவ ஐப் போட்டிச்சினம். ஒரு சின்ன அறைக்குள்ள முகம் பாக்கேலாத கண்ணாடீல சீப்பால தலையை இழுத்திட்டு வெள்ளையாத் தெரியும் எண்ட நம்பிக்கையில Cuticura powder ஐயும் போட்டிட்டு எல்லாருக்கும் பொருந்திற மாதிரி இருக்கிற ஒரே கோட்டை போட்டிட்டுப் போய் ஒரு stool இல இருக்க , தலையை உயத்துங்கோ, கொஞ்சம் மேலபாருங்கோ கொஞ்சம் கீழ, கொஞ்சம் அங்கால இங்கால எண்டு சைக்கிள் மாதிரி buckle எடுத் திட்டு, சரி "இங்க பாருங்கோ கண்ணை வெட்டாதீங்கோ" எண்டு தலையை காட்டாமல் குரலை மட்டும் காட்டினார் கமராக்காரர். கண்ணையே வெட்டாம கன நேரம் இருந்து கடைசியா அடிச்ச கடயளாக்கு கண்கலங்கி இருட்டுக்கால தடவித்தடவி வெளீல வந்தா பிரின்ட் போட்டுத் தர ரெண்டு கிழமை செல்லும் எண்டு சொல்லிச்சினம்.



கலியாணவீட்டை கமராக்காரார் ஆதிக்கம் செய்யாத காலத்தில கலியாண வீட்டில கமராவோட திரிஞ்சா பெருமை எண்டு நினைக்கத்தொடங்கினது எண்பதின்டை தொடக்கத்தில இருந்திச்சுது. Double barrel மாதிரி load பண்ணிற Kodak இன்டை

28 ஆம் பக்கம் பார்க்க...





# அமரர் நாகமுத்து சாந்திநாதன் ஒரு ஆர்ப்பாட்டம் இல்லாத அற்புதக் கலைஞன்

**1993** ஒக்ரோபர் 16 மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முதல் முத்தமிழ் விழா . தீசன் இயக்கிய“ Sponsor Ready “நாடகத்தில்நடித்த என்னைத் தேடிவந்து ஒருவர் பாராட்டுகிறார். இவர் சாந்தி நாதன்-நடிகர், இயக்குனர்,வானொலிக் கலைஞர் என அறிமுகம் செய்கிறார் அதிபர் கனகசபாபதி. அன்று பாராட்டிய தில் ஆரம்பமான சாந்திநாதனின் நட்பு குடும்ப உறவாகி பாராட்டில் தோடர்கிறது.

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களுக்கு மதிப்பளித்துப் பாடறிந்து ஒழுகும் சாந்திநாதனை அனைவரும் நேசித்தார்கள் சொந்தம் கொண்டாடினார்கள். அழைத்த விழாக்களுக்கு குறித்த நேரத்திற்கு தவறாது செல்லும் சாந்தி விழா முடிந்த பின் அதன் அமைப்பாளரையும் கலைஞர்களையும் பாராட்ட தவறமாட்டார் திருத்தங்கள் இருப்பின் நாசூக்காக அவர்களுக்கு எடுத்துக் கூறவும் தேவையெனின் உதவவும் தயங்கமாட்டார்.

நேர்மை,நேர்த்தி ,நேரம் தவறாமை சாந்தியின் தாரக மந்திரம். பொறியியல் துறை சார்ந்த சாந்தி திட்டங்கள் இன்றி எதுவும் தொடங்கார். பத்து பூக்கன்று நடுவதென்றாலும் திட்டமிட்டு சரியாகச் ஆக செய்து முடிப்பார்.

புராந்தகனும் நானும் சாந்தியை அவரது இல்லத்தில் வாரத்திற்கு ஒருதரமாவது சந்திப்போம். சாந்தியின் சம்பாஷனையும் மனைவி உஷாவின் உபசரிப்பும் எமக்கு பெரு விருந்தாயிருக்கும். நேருக்கு நேர் சந்தித்து முகம் பார்த்து உரையாடுவதுதான் சிறந்த தொடர்பாடலாக இருக்கும் என்பது சாந்தியின் கோட்பாடு. இதற்காக நேரத்தையும் தூரத்தையும் பொருட்படுத்தாமல் பயணிப்பார்

சாந்தி விழாக்களைப் பொறுப்பேற்றால் ஒவ்வொரு நிகழ்வும் பாரவையாளரைச் சென்றடைய வேண்டும் என்பதற்கு கடினமாக உழைப்பார் நாடக இயக்குனராக சிறந்து விளங்கிய சாந்தி மகாஜனக் கல்லூரி முத்தமிழ் விழாக்களுக்கும் அரங்காடல் நிகழ்வுகளுக்கும் பல நாடகங்களை இயக்கியுள்ளார்.

25 ஆண்டுகளுக்கு மேலாக மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க முத்தமிழ் விழாவின் சூத்திரதாரியாக

செயற்பட்ட சாந்நி கணித பொது அறிவுப்பரீட்சை பொறுப்பையும் ஏற்றுத்திறம்பட நடத்தினார்தலைவராப் பணியாற்றியபின் காப்பாளராகஇருந்து மகாஜ



திரு.கதிர் துரைசிங்கம்
அவர்களுடன்
அமரர் நா.சாந்திநான்

னக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் -கனடாக் கிளையைவழிநடத்திவந்தார்.

இவரின் நாடகங்கள் புரியுக்கூடியதாகவும் பார்வையாளருக்கு செய்தி ஒன்றைக் கூறுவதாகவும் அமையும் அரங்காடலின் “ஆக்குவாய் காப்பாய் “நாடகத்தில் என்னை ஒரு வைத்திய நிபுணராக நடிக்க செய்து அதை ஐந்து மேடை ஏற்றி, பலர் பாராட்டைப் பெறவைத்த இயக்குனர் சாந்தி என்னை அண்ணை என்றே அழைப்பார். இங்குநடந்த எங்கள்வீட்டு வைபவங்களை இயக்கியவரும் சாந்தியே.

2012 இல் உஷா சாந்தி உடன் மனைவியும் நானும் விடுமுறைக்கு இலங்கை சென்றபோது சாந்தியின் திட்ட மிடலின் திறனையும் அதன் பலனையும் அனுபவித்தேன். 2018 இல் இருந்து மூன்று முறை நடந்த எனது முழங்கால் சத்திர சிகிச்சை சம்பந்தமான பயணங்களுக்கு எனது பார்த்தசாரதியாக விருப்புடன் பணியாற்றியவர் நணபன் சாந்தி. அந்துடன் எந்த விழாவாயினும் என்னைக்கூட்டிச் செல்பவர் சாந்திதான்-ஐந்து மணி என்றால் 4.59 க்கு சாந்தியின் Car driveway யில் நிற்கும். -விழா நிகழ்வுகளை விட வாகனத்தில் சாந்தியின் விமரசனமும் சம்பாஷனையும் சுவாரசியமாக இருக்கும் தமிழர் தகவல் ஆண்டு மலர்களில் சாந்தி எழுதிவந்த கட்டுரைகள் அவரின் எழுத்து வன்மைக்கு எடுத்துக்காட்டு.

காலம் தாழ்த்தல்,மறதி,சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் இந்த நான்கும் சாந்தியிடம் இல்லாதவை.சாந்தியின் நடை உடை, இரசனை உரையாடல் ஹாசியம் விமர்சனம் அனைத்துமே தனித்துவமானவை.

எல்லோற்கும் நண்பனாகவும், எல்லோற்கும் இனியவராகவும், எல்லோற்கும் உதவுபவராகவும், எல்லோற்கும் பொதுவாவனராகவும் எல்லோரின் மதிப்பிற்கு உரியவராகவும் எம்மத்தியில் வாழ்ந்த திரு நாகமுத்து சாந்திநாதன் ஒரு ஆர்ப்பாட்டம் இல்லாத அற்புதக் கலைஞன்.

ஆனி 10 சாந்தியுடன் இருந்த நான் மதியம் 12: 15 அளவில் விடை பெறுகிறேன் என்று கை அசைத்தேன் விடை பெறும் நேரம் எனக்கும் நெருங்கி விட்டது, எல்லாம் திட்டப்படி போய்க் கொண்டிருக்கு என எனக்கு உணர்ந்த சாந்தி கட்டைவிரலை நிமிர்த்திக் (Thumbs up) காட்டிய போது நட்பின் வலிமையையும், வலியையும் உணர்ந்தேன்.



ஆக்குவாய் காப்பாய் நாடகத்தில் ஒரு காட்சி...

டொட்மண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்
வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

கீபோர்ட் (Keyboard)
18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
19:15- 20:15
6€ Pro Stunde
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# உல்லாசப் பயணமும் உயிர் பலியும்



விமல் சொக்கநாதன் (இங்கிலாந்து)

என் பள்ளிப் பராயத்தில் கொழும்பு பாடசாலை விடுமுறைகளை கழிக்க யாழ்ப்பாணத்தின் ‘கொக்குவில்’ என்ற என் கிராமத்திற்குச் சென்ற பாட்டியுடன் தங்குவது வழக்கம் அந்த நாட்களில் ஒரு நாள் என் பாட்டியின் இல்லம் அமைந்திருந்த கொக்குவில் அச்சுக்கூடத்து ஒழுங்கை வழியாக நூற்றுக்கணக்கான கிராமத்தவர்கள் கொக்குவில் ரயில் நிலையத்தை நோக்கி ஓடினார்கள். கொக்குவில் கிராமத்தில் 1950 களில் கொலைபேசிகளோ, தொலைக்காட்சிகளோ இல்லாத இருண்ட காலம் அது.

கொக்குவில் ரயில்வே ஸ்டேஷனில் ஒரு விமானம்விழுந்து நொறுங்கி விட்டதாம் யாரோ ஒரு வம்பன் உருவாக்கி பரப்பிவிட்ட கதையை என் சிறுவயது மூளை ஏற்க மறுத்தது. விழுந்த விமானத்தை நேரில் பார்க்கவே இத்தனை கூட்டம். எனக்குள் குடியிருந்த ‘இன்வெஸ்டிகேஷன் சிறப்பு நிருபர்’ அன்று மாலைக்குள் உண்மையை விசாரித்து ஊர் மக்களை தெளிவுபடுத்தியிருந்தார்.

‘அது விமானமும் இல்லை விழவுமில்லை’ அசாதாரண ஒலியுடன் கொக்குவில் ரயில் நிலையத்தை தாண்டி ஓடியது இலங்கை அரசு கனடாவிலிருந்து இறக்குமதி செய்திருந்த யாழ். தேவி- அதிவேக ரயில்தான்! இப்படி ஒரு ஒலியை முன்னர் கேட்டிராத ‘யாழ்ப்பாணத்து குடிமக்கள்’ பின்னர் இந்த ரயிலில் வருகை புறப்பாடு இவற்றை வைத்தே தன் கடிகார முட்களை முன்னே/ பின்னே தள்ள ஆரம்பித்தனர். எது எவ்வாறாயினும் ஒரு விபத்து பேரழிவு இடம்பெற்றதும் அந்த இடத்தில் முதல் ஆளாக தாமே போய் நிற்க வேண்டும் என்பது ஒரு சாமான்ய மனிதனின் பேரவா.

உலக வரலாறுகளில் சில ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். ஜேர்மனிய நாஸி கொடுங்கோலன் ஹிட்லர், யூத இனத்தை அப்பா, அம்மா, தம்பி, தங்கை என்று ஒட்டு மொத்தமாக நச்சுப் புகையூட்டி கொன்ற சம்பவம் உலக வரலாற்றின் கறைபடிந்த பக்கங்கள் அவை. உலகப் போர் முடிவடைந்து பல வருடங்களாகியும் பொது மக்கள் பார்வைக்காக அவை திறக்கப் படவில்லை.

ரஷ்யாவின் அதிபராக மிக்கேல் கோப்ஸர்ஸோவ் பதவியேற்ற சில தினங்களில் கிழக்கு/ ஜேர்மன் பிரிவினை சுவர் இடித்து அகற்றபட்டது. ‘பிச்சை வேண்டாம் நாயைப் பிடி’ என்ற போக்கில் ரஷ்ய போர் வீரர்கள் கிழக்கு ஜேர்மனியை விட்டு ஓடினார்கள். க்மது ஆடை அணிகலன்கள் தமது இராணுவத் தொப்பிகள் ஆகியவற்றை ஒரு சில அமெரிக்க சிகரெட் பெட்டிகளுக்காக பண்டமாற்று செய்துவிட்டு ஓடினார்கள். விடுவிக்கப்பட்ட கிழக்கு ஜேர்மனியை நான் பார்க்க போயிருந்த வேளையில் ரஷ்யர்களின் குளிர்கால தொப்பி ஒன்றை நானும் வாங்கிக் கொண்டேன்.

கிழக்கு ஜேர்மனியில் ஹிட்லர் நடத்திய வதை முகாம்களை நான் பார்க்க விரும்பவில்லை. வருவோரின் பார்வைக்காக அந்த வதை முகாம்கள் திறக்கப்பட்டு ஒலி, ஒளி அமைப்புகளும் செய்திருந்தார்கள். ஒலியமைப்பு என்றால் என்ன இசையா? இல்லவே இல்லை. அந்த முகாமில் நிரந்தரமாக ஒலித்து வந்த அழுகுரல்கள் கூக்குரல்கள்... இவற்றை நான் பார்க்காவிட்டாலும் பார்த்தவர்கள் விபரித்தார்கள்.

2001 செப்டெம்பர் 11 ஆம் திகதி அல்குவைதா பயங்கரவாதிகள் மூன்று பயணிகள் விமானங்களைக் கடத்தி நியூயோர்க் நகரின் உலக வர்த்தக நிலையத்தின் மீதும் வொஷிங்டன் பாதுகாப்புத் திணைக்களத்தின் மீது பயங்கர தாக்குதலை நடத்தினார்கள். மூன்று விமானங்களிலும் இருந்த அத்தனை பயணிகளும் கொல்லப்பட்டார்கள். அடுத்த ஆண்டு 2002 டிசம்பரில் நான் நியூயோர்க் நகரம் சென்ற போது அந்த இடத்தில் உலக வார்த்தக மையமோ பல்லாயிரம் பேர கொல்லப்பட்ட அறிகுறிகளோ இருக்கவில்லை. அந்த இடத்திற்கு மட்டும் (Ground Zero) என்று அரசாங்கம் பெயரிட்டிருந்தது.

1912 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (சித்திரை புதுவருடம்) பிரிட்டனிலிருந்து அமெரிக்காக்கு தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்ட ‘டைட்டானிக்’ என்ற அதிசொகுசு கப்பல் 2224 பயணிகளுடன் பயணம் செய்த வேளையில் பணிப்பாறை ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானது. ஆயிற்றுக்கிழமை கப்பலில் நேரம் இரவு 11.4. பயணிகளில் பெரும் பாலானோர் உறங்கிக்கொண்டிருந்தார்கள். பனிப்பாறை மோதலைத் தொடர்ந்து அந்தப் பிரமாண்ட கப்பல் மூன்று மணி நேரத்தில் முழுமையாக நீரில் மூழ்கி சுமார் 1,500 பயணிகளை ஜலசமாதியடைய வைத்தது.

இப்படியாக 111 ஆண்டுகளுக்கு முன் அத்லாந்திக் மா கடலில் பயணிகளோடும் பொதிகளோடும் பல்லாயிரம் பவுண் பெறுமதியான

28 ஆம் பக்கம் பார்க்க...












விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
Kulturbüro
Stadt Dortmund Kulturbetriebe
DORTMUND
தமிழர் தெருவிழா
2023
Tamil Streetfestival
01.09.2023
FR. 16:00 - 00:00
02.09.2023
SA. 11:00 - 00:00
03.09.2023
So. 12:00 - 19:00
Park der Partnerstädte
Bundesstraße 54
Bundesstraße 54
westentor
Rheinische Str.
Gemeinsam in Vielfalt
Der Integrationsrat
SIVANDIGITAL
VMDO
ortel MOBILE
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ்
TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
0151633 633 33 | 0157 370 50 110 | 0179 26 30 317 | 0151 279 909 90

ஞானத்திலே பர
மோனத்திலே -- உயர்
மானத்திலே அன்ன
தானத்திலே,
கானத்திலே அமு தாக
நிறைந்த
கவிதையிலே உயர் நாடு




# 'இலங்காபுரி'



ஒவ்வொருவர் உள்ளத்துடிப்பிலும் நாட்டுப்பற்றினைத் தூண்டி விட்டவர் பாரதி. தேசநேசனாய் அவனாற்றிய கவியிலெல்லாம் தாய்மண்ணின் வாசம் வீசிக்கொண்டே இருக்கும். கண்கள் கவ்வக் கவ்வக் காதல் மேலெழும் கவி வரிகள். நம் திருநாட்டினை மதிக்கவும், புகழவும், வியக்கவும், விழிக்கவும் கற்றுத் தரும் கவி வரிகள். வெறும் மொழியல்ல , உயிர் தீண்டும் புனிதம் அவை.

பற்றுக் கொண்ட நாட்டின் மீது பக்தி கொண்டு பாரதி பாடிய பாடல்களை , பாரதி மீது பக்தி கொண்டு பாடி வியந்ததன் பயனாய் மலர்ந்தது " இலங்காபுரி " பாரத நாட்டிய மார்க்கம்.

நம் தாய்நாடான ஈழத் திருநாட்டினை கருப்பொருளாகக் கொண்டு பரத நாட்டிய மார்க்கத்தினை ஆக்கும் எண்ணம் விழைந்தது. இப்பிறப்பில் யான் பெற்ற பெருவரமாய் எண்ணத் துணை நின்றார் என் ஐயன் பாரதியின் கொள்ளுப் பெயரன் ராஜ்குமார் பாரதி ஐயா.

ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி நிறை வான்மணி லங்கா நறுஞ்சோலை கொள் லங்கா என நமது தேசிய கீதம் பரத மார்க்க உருப்படியின் முதல் அங்கமான புஷ்பாஞ்சலியில் அழகுற இணைந்து ஜொலித்தது.நாட்டைக்குறிஞ்சி ராகத்தில் அமைந்திருந்த இலங்கை தேசிய கீத புஷ்பாஞ்சலியை தொடர்ந்து அலாரிப்பு அமைந்திருந்தது.

இறைவன் அருளும் பொழுதுகள் அனைத்தும் அதிசயம் நிறைந்தன. அனுபவிப்பவர்க்கு மட்டுமே அப்புரிதல் உண்டு. அதனால் தான் " இத்தரைமீதினில் அமர சுகம் காணலாம் " என்று உறுதியாகச் சொல்லியிருப்பார் பாரதி.

அவ்வாறு ஒரு அதிசய கணத்தில் உருவானதே இந்த அலாரிப்பு. இலங்கையைப் பற்றிய மார்க்கம் என்பதால் இலங்கையோடு பொருத்தமாக இருந்தால் நன்றாக இருக்கும் என்ற எண்ணம் என்னுள் இழையோடி இருந்தது. அதனால் இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களையும், இருபத்தைந்து மாவட்டங்களையும் கருத்தில் கொண்டு 9,5 எண்கள் மீது நாட்டம் வந்தது. 9,5 இரண்டும் பஞ்ச ஜாதிகளில் அடங்கும். தாளம் சார்ந்த விடயங்களில் பஞ்ச ஜாதி என்பது மிக முக்கிமானது.

எனவே 9,5 ஸ்ரீ 14 என்ற எண்ணில் அலாரிப்பு அமையப்பெற்றது. இலங்கையின் தேசியக் கொடியில் வாள் ஏந்திய சிங்கம் ஜெயம் கொண்டு திகழ்வதற்கு இணங்க , 108 தாளங்களில் ஒன்றான சிம்மலீலா தாளத்தில் 9,5 சங்கீர்ணம் , கண்டம் என்ற சொற்கட்டு அளவில் அலாரிப்பு அருவியாய் கொட்டியது. படைப்பிற்கு நன்றி கூறிக் கொண்டு எண்ணமதில் தோன்றிய அலாரிப்பை பக்குவமாய் குறித்து வைத்துக்கொண்டேன்.இவ்வாறாக இலங்காபுரி மார்க்கத்தின் முதல் உருப்படி அமையப்பெற்றது.

அதனை அடுத்து இலங்காபுரி வர்ணம் அமையப்பெற்றது. இதில் இலங்கையின் இயற்கை வளங்கள், மலையகம், தேயிலைத்தோட்டம், நீர்வீழ்ச்சி , கனிமங்கள், துறைமுகங்கள், செம்மண், சிகிரியா, தமிழர் தம் கூத்துக்கலை , ஆட்சி செய்த மன்னர்களில் மாண்புறு ராவணேஸ்வரன், பஞ்ச ஈஸ்வரங்கள், கதிர்காமம் என இலங்கையின் பல பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டு புராண, நவீன விடயங்கள் எனப் பலவகையான சஞ்சாரிகள் அமையப்பெற்றது. இலங்கை முழுவதையும் சுற்றிப்பார்த்த அனுபவம் இந்த வர்ணத்தினைப் பார்த்தால் கிடைத்துவிடும்.

தொடர்ந்து மகாகவி யின் தேரும் திங்களும், (இவ்வுருப்படியின் விளக்கம் முந்தைய வெற்றிமணி பத்திரிகையில் எழுதியுள்ளேன் ), ஈழத்து சைவத் தமிழர் நெஞ்சள்ளும் நல்லூர் முருகனின் திருவிழா காலத்தில் இலங்காபுரி மார்க்கம் அரங்கேற்றுவதை மனதிருத்தி யோகர் சுவாமி அருளிய நல்லூர் முருகன் நற்சிந்தனை எனப் பல்வேறு சுவாரசியங்கள் சேர்ந்து கொண்டன.

கலைகளினூடாக நம் தாய் திருநாட்டின் புகழை பாடி ஆடி மகிழ என்ன புண்ணியம் செய்தோமோ ? எட்டுத் திக்கும் சென்று கொணர்ந்த கலைத்தேனில் ஊறி உருவான நம் இலங்காபுரி மார்க்கம் எட்டு திக்கும் சென்று நம் நாட்டின் பெருமையை , இலங்கையின் புகழை பரப்பிட வேண்டுமெனப் பிரார்த்தித்து நம தலை நினதடி மேல் வைத்தோமே நமதுயிரே தாயே ■

தமிழ் எங்கள்
உயிரின் இருப்பு


லிவர்ப்பூல் தமிழ்க்கல்விக்கூடம்
Liverpool Tamil Kalvikkoodam

EST: 2014

Opening Time;
Saturday's between 1:30 PM and 5 PM.

Telefon: 07723 957543

THE DE LA SALLE ACADEMY, Carr Ln E, Croxteth , Liverpool L11 4SG, UK


AJ
ENTERTAINMENT
PRESENTS
A.R.RAHMAN
LIVE MIT DIR
POWERED BY tamil.de
portal • lifestyle • entertainment
CONTACT- 015145459696



சிவவினோபன் (ஜெர்மனி)

# உன்னை ஊனமாக்கிறதா? இந்தச் செயற்கை நுண்ணறிவு AI

AI என்று சொல்லப்படுகின்ற இந்த புதிய தொழில்நுட்பத்தின் விரிவாக்கமாக, நாம் தலைப்பில் பார்த்த அந்த விரிவாக்கத்தையும் எடுத்துக் கொள்ளலாம், அல்லது Artificial intelligent எனப்படும் இதையும் சொல்லாம். இந்த AI இன்று பிறந்த விசித்திர மாருதி. இது மனிதாபிமான குழந்தையாக மாற இன்னும் பல கட்டங்கள் உண்டு. இப்போது கணினிக்குள் இருக்கும் போதே, இது செய்யும் சேட்டைகள் ஏராளம். ஆம் கற்பிக்கும் ஆசிரியை கூட களங்கப்படுத்தி மாற்றுவதற்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த இந்த தொழில்நுட்பத்தை வேறு எவ்வாறு சொல்ல முடியும்? இது இன்னும் ஒரு சில வருடங்களில், தானியங்கி ஆசையும் பௌதீகவியல் பொருளாய் மாறினால், அதன் விளைவுகள் எண்ணில் அடங்காதவை. இதுபோல் புதிய தொழில்நுட்பங்களின் வருகை எப்போதும் தலைமுறையை தலைகீழாக திருப்பிப் போட்டு விடும்.

கால்நடைகளாக, கால்நடைகளோடு வாழ்ந்த மனிதனிற்கு, வாகனங்கள் வந்ததும் வேகத்தினை அதிகரிக்க, விபத்தினில் கொண்டு சென்று விட்டது இந்த தொழில்நுட்பம். இந்தக் கண்டுபிடிப்புகளின் மத்தியில் உடலை அசைத்து விபத்தில் நிறுத்தும் பௌதீகவியல் வாகனத்தை தொடர்ந்து, மனதை அசைத்து விபத்தில் நிறுத்தும் இலத்திரனியல் கண்டுபிடிப்புகள் ஆரம்பம் ஆகின. அதுவே கணினி. இன்று உடலையும் அசைக்க விடாமல், மனதையும் அசைக்க விடாமல், புதிய சிந்தனையை மட்டும் அசைக்க வைத்து மற்றைய அனைத்து பகுதிகளையும் ஊனமாக்கும் புதிய முயற்சியே இந்த AI என்று சொன்னால் அதிலும் ஒரு சில குறைபாடுகள் உண்டு.

என்னடா எடுத்தவுடனே குறைகளை மட்டும் சொல்லுகின்றேன் என்றால்! தொழில்நுட்பம் ஒருபோதும் குறைவானது அல்ல. கத்தி ஒவ்வொரு முறையும் தீட்ட தீட்ட கூராகிக் கொண்டே செல்லும். ஆனால் அந்தக் கத்தியை குழந்தையிடமும், மூளை குறைபாடு கொண்டவர்களிடமும் கொடுக்கக் கூடாது. அவ்வாறு கொடுத்தால் ஆயுதம் தாங்குபவருக்கு மட்டுமல்ல, தள்ளி நின்று பார்க்கும் உயிரிற்கும் ஆபத்து ஆகிவிடும். அதைத்தான் ஆரம்பத்தில் சொன்னேன் புதிய தொழில்நுட்பங்கள் வர வர விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. AI என்கின்ற இந்த தொழில்நுட்பத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்றால் அல்கோரிதம் ( Algorithm ) என்கின்ற ஒரு விடயத்தை ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதாவது உங்களுக்கு கணிதம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது, உங்களுக்கு படம் வரைய தெரிந்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது, உங்களுக்கு பாடல் எழுத தெரிந்திருக்க வேண்டிய அவசியம் கிடையாது, உங்களுக்கு ஆர்வம் இருந்தால் மட்டும் போதும் இப்படி ஒரு படம் வரைந்தால் வடிவாகா இருக்கும், இப்படி ஒரு கவிதை எழுதினால் அழகாக இருக்கும், இப்படி ஒரு கணிதத்தின் தீர்வை கண்டுபிடித்தால் அறிவு கூர்மையாக இருக்கும், என்கின்ற விடயத்தை கொடுத்தால் மட்டும் போதும், உங்கள் நண்பர் உங்களுக்காக நன்றாக படம் வரைந்து தந்தால், நன்றாக கவிதை எழுதி தந்தால், நன்றாக கணக்குப் புதிர்களின் தீர்வுகள் கண்டுபிடித்து தந்தால், அதை உங்களுடைய கண்டுபிடிப்பாக மற்றவர்களிடம் காட்டி நீங்கள் பெருமைப்பட முடியும் என்றால், அதுதான் இந்த AI.

இந்த AI, அல்கோரிதம் என்கின்ற ஒரு கணித அமைப்பின் மூலமாக செயற்பட்டு வருகின்றது. அல்கோரிதம் என்றால், ஒரு செயற்பாடு செயல்படுவதற்கு எப்படிப்பட்ட நிகழ்தகவுகள் இருக்கின்றது, உதாரணத்துக்கு சதுரங்க விளையாட்டில் ஒவ்வொரு சிப்பாய்களையும், ஒவ்வொரு காய்களையும், அரக்கும் பொழுது, எப்படிப்பட்ட விளைவு ஏற்படும் என்பதை முன்கூட்டியே கணித்து

28 ஆம் பக்கம் பார்க்க...

## AI இன் விளக்கம் Artificial Intelligence ஆ? அல்லது அம்மணம் இல(கு)வசம் (Ammanam Ila(ku)vasam)



சிகிரியா கோட்டையில் வரையப்பட்டுள்ள பெண்கள், வெவ்வேறு ஆடைகளுடன் (அக்கால) வரையப்பட்டிருந்தால் எவ்வாறு இருந்து இருக்கும் என்ற கற்பனையில் AI தொழிநுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட படங்கள்






A1 TEC செயற்கை நுண்ணறிவு கொண்ட செய்தி வாசிப்பாளர். இந்தியா ஓடிசாவில் “A1“ தொழில்நுட்பம் மூலம் செயற்கை நுண்ணறிவு கொண்ட செய்தி வாசிப்பாளரை தனியார் தொலைக்காட்சி சேவையானது உருவாக்கியுள்ளது. “லீசா“ என இந்த A1 தொழில்நுட்ப பெண்ணுக்கு பெயரிட்டுள்ளனர். ஆங்கிலம் மற்றும் ஒடிசா மொழிகளில் செய்திகளை வாசிக்கின்றது அந்த பெண். மேலும் அந்த பெண்ணை சமூக ஊடகங்களிலும் பின்தொடரலாம் என குறித்த செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.






சேவியர்
(தமிழ்நாடு)

## நடுப்பக்கம்

# தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே!

## கவிஞர் நா.முத்துக்குமார் நினைவலைகள்!

எனது முதல் கவிதைத் தொகுதிக்கு முன்னுரை வேண்டும் என முடிவெடுத்த போது என் மனதிற்குள் வந்தவை இரண்டே இரண்டு பெயர்கள் ஒன்று கவிப் பேரரசு வைரமுத்து, இன்னொன்று நா.முத்துகுமார். இன்றும் நான் திரையுலகின் ஒப்புமையற்ற தனித்துவக் கவிஞர்கள் எனக் கருதுவது இவர்கள் இருவரையும் தான். வைரமுத்துவை அணுகுவது சற்று சிரமமாக இருந்ததால், நான் நா.மு அவர்களை அணுகினேன். நடந்தது 2002ம் ஆண்டு !



தன்னுடைய ஸ்கூட்டரை ஓட்டிக் கொண்டு கோடம்பாக்கத்தில் ஒதுக்குப் புறமாக இருந்த ஒரு டீக்கடைக்கு வந்தார். டீ குடித்துக் கொண்டே பேசினோம். கையில் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே அவர் கவிதைகளைப் புரட்டிக் கொண்டிருந்தார். வாட்சப்களோ, இணையமோ இல்லாத அன்றைக்கு கவிதைகளையெல்லாம் கொத்தாக பிரிண்டவுட் எடுத்து அவரிடம் கொடுத்திருந்தேன். கவிதைகளைப் படித்துக் கொண்டிருந்த அவரின் முக பாவனைகளை நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு விடைபெற்றார். சில நாட்களிலேயே அழகான ஒரு முன்னுரையை அனுப்பியிருந்தார். ‘சேவியர் கவிதைகளில் சங்க இலக்கியத்துக்கு ஒத்த விவரணைகளைக் காண முடிகிறது. படித்துக் கொண்டே வருகையில் பல இடங்கள், அடடா !! என வியக்க வைக்கின்றன‘ என கவிதைகளை மனம் திறந்து பாராட்டியிருந்தார். எனது நூலுக்கு, ‘ஒரு மழைத்துளி நனைகிறது‘ என பெயரிட்டிருந்தேன். அவர் அதை ‘ஒரு மழையிரவும், ஓராயிரம் ஈசல்களும்‘ என மாற்றச் சொன்னார். மாற்றினேன். !

அதன்பின் எங்கள் நட்பு தொடர்ந்து கொண்டே இருந்தது. அவருடைய பாடல்களுக்கெல்லாம் என்னுடைய விமர்சனங்களை அனுப்புவேன். அன்றைக்கு புகழின் உச்சிக்கு அவர் நுழையாத காலம். எனது விமர்சனங்களுக்கெல்லாம் அவர் பதில் சொல்வார். நெகடிவ் ஆகப் பேசியிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்வார்.



நா.முத்துக்குமார் மறைந்த நாள் நினைவாக 14.08.2023

“எனது பாடல்கள் எல்லாவற்றிலும் நீங்கள் மூன்று நான்கு ஹைக்கூக்களை எடுக்க முடியும்“ என அடிக்கடி சொல்வார். அது உண்மை தான் என அவரது ஒவ்வொரு பாடல்களை ரசிக்கும்போதும் நான் நினைப்பேன். நான் திரைப்படப் பாடல் கேசட்களை அதிகமாய் வாங்குவதில்லை. அப்படி வாங்கினால் அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கும். எழுதியவர் வைரமுத்து, அல்லது நா.முத்துகுமார் என்று இருந்தால் மட்டுமே வாங்குவேன்! இசையமைப்பாளரையோ, நடிகரையோ சார்ந்து பாடல்கள் கேட்கும் வழக்கம் அன்று தொட்டு இன்று வரை இல்லை.

எப்போது நேரில் சந்தித்தாலும் மகிழ்வுடன் உரையாடுவார். அவர் விடைபெறுவதற்கும் சில ஆண்டுகளுக்கு முன் சென்னை புத்தகக் கண்காட்சியில் சந்தித்தேன். ‘சேவியர் நல்லா இருக்கீங்களா, பெரிய பெரிய கவிதைத் தொகுப்பு எல்லாம் போட்டிருக்கீங்க.. பாத்தேன்.. வாழ்த்துகள்‘ என்றார். அதன்பின் அவரைச் சந்திக்க காலம் வாய்ப்பு தரவில்லை. அவர் சட்டென விடைபெறுவார் என எதிர்பார்க்கவே இல்லை. தமிழ்த் திரையுலகமும், இலக்கிய உலகமும் ஒரு மாபெரும் கலைஞனை இழந்திருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

அதன்பின் எந்த ஒரு திரைப் பாடலாசிரியரும் என்னை வியக்க வைத்ததில்லை. பலரோடு எனக்கு நட்பு உண்டு. ஆனாலும் என்னை வியக்க வைத்தவர் அவராகவே இருக்கிறார் இன்றும் ! மற்றவர்களின் பாடல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் வசீகரிக்கும், ஆனால் நா.மு போல எல்லா பாடல்களிலும் வசீகரித்தவர் அதன்பின் தோன்றவே இல்லை !

கலைஞர்கள் மறைவதில்லை. அவர்கள் தங்களுடைய கலைகளின் வழியாக வாழ்ந்து கொண்டே இருப்பார்கள் எனும் கூற்று, கவிஞரின் வாழ்க்கையில் நூற்றுக்கு நூறு சமம். விரைவில் விடைபெற்றுவிடுவோம் என்பதை அறிந்தவர் போல இடைவிடாமல் பாடல் எழுதித் தள்ளிக் கொண்டே இருந்தார். ஆனாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் நேர்த்தியாகவும் அழகாகவும் இருந்தன.

வைரமுத்து தனது கவிதைகளில் உவமைகளுக்காக வானத்தைப் பார்ப்பார், இவர் பூமியைப் பார்ப்பார். தன்னைச் சுற்றிய பறவைகள், வகுப்பறைகள், கதவுகள், கண்ணாடிகள், புழுது, வெயில் எல்லாமே இவரிடம் பாடுபொருளாகிவிடும். பார்க்கும் எல்லாவற்றையும் கவிதையாக்கிவிடும் மந்திரக் கோல் இவரது பேனாவாகியிருந்தது.

17 ஆம் பக்கம் பார்க்க...



# தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே!

## கவிஞர் நா.முத்துக்குமார் நினைவலைகள்!

பறக்காத பறவைக்கெல்லாம்
பறவை என்று பெயரில்லை
திறக்காத மனதில் எல்லாம்
களவு போக வழியில்லை

என கானாக் காணும் காலங்கள் பாடலில் மிக அழகிய கவித்துவத்தை முடிந்து கொண்டே வருவார். சட்டென, சாதாரண காதலனோடு தரையிறங்கி

நடை பாதைக் கடையில்
உன் பெயர் படித்தால்
நெஞ்சுக்குள் ஏனோ
மயக்கங்கள் பிறக்கும்!

என சொல்லி வியக்க வைப்பார். கவிதைகளைக் கேட்கும் ஒவ்வொருவரும் தங்களது காதலுக்குள் அல்லது நட்புக்குள் அதை திணித்துப் பார்க்க வைக்கும் வித்தை நா.முவிடம் இருந்தது.

யாருமே யோசிக்காத கோணத்தில், எல்லோரும் பார்க்கின்ற விஷயங்களை சிந்திப்பதில் நா.மு மிக மிக வித்தியாசமானவர். அந்த வகையில் என்னை எப்போதும் வியக்க வைக்கின்ற பாடல்

ஒரு பாதிக் கதவு நீயடி,
மறு பாதிக் கதவு நானடி
பார்த்துக் கொண்டே பிரிந்திருந்தோம்
சேர்த்து வைக்கக் காத்திருந்தோம் !

அந்தப் பாடலைக் கேட்டபின்பெல்லாம இரட்டைப் பாளி கதவைப் பார்க்கும் போதெல்லாம் காதலனும், காதலியும் காதலில் அசைந்து கொண்டிருப்பதாகவே எனக்கும் தோன்றும் !

இரவு பயம், திருட்டு பயம்
கதவுகளைச் சேர்த்துவிடும்
கதவுகளைத் திருடிவிடும்
அதிசயத்தைக் காதல் செய்யும் !

என ஒரு கவிதையைப் பாடலுக்குள் சொருகி வியக்க வைப்பார். தம்பதியருக்கும், காதலருக்கும் ஒரு மெல்லிய மயக்கத்தை உருவாக்கும் அழகான பாடல் இது !







ஒரு கடையில், குறைந்த சம்பளத்தில் நிறைய அடக்கு முறைகளுக்கிடையே வாழும் ஒரு இளம் பெண்ணின் மீதான காதலை அங்காடித் தெரு திரைப்படத்தில் மிக அற்புதமாக எழுதியிருப்பார் நா.மு. அவருடைய அந்தப் பாடல் தான் அந்தத் திரைப்படத்தின் காதலுக்கே அழகிய வர்ணமடித்தது ! அவள் அப்படி ஒன்றும் அழகில்லை எனும் பாடலில் அவர் காதலின் காதலை கவித்துவமாய்ச் செதுக்கியிருப்பார். ரம்பையும், ஊர்வசியும் ஓடி ஒளிந்து கொள்ளும் அழகியல் வரிகளை காதலிக்குச் சூட்டியிருப்பார்.

அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவளுக்கு யாரும் இணையில்லை
அவள் அப்படி ஒன்றும் கலரில்லை
ஆனால் அது ஒரு குறையில்லை !

என வித்தியாசமாய் அவரது காதல் ஒரு புன்னகையோடு பயணிக்கிறது !

அவள் பொம்மைகள் அனைத்து உறங்கவில்லை
நான் பொம்மை போலே பிறக்கவில்லை
அவள் கூந்தல் ஒன்றும் நீளமில்லை
அந்தக்காட்டில் தொலைந்தேன்
மீளவில்லை !

என, அழகிய காதலை இலக்கியமாய்ச் சொல்லித் திரும்பும் போது

வளையாமல் நதிகள் இல்லை
வலிக்காமல் வாழ்க்கை இல்லை,

என போகிற போக்கில் வாழ்க்கையின் தத்துவத்தையும் இரண்டே வரிகளில் தெளித்து விடும் வித்தை அவரிடம் இருந்தது !

எத்தனை கோடி கண்ணீர்
மண்மீது விழுந்திருக்கும்
அத்தனை கண்ட பின்னும்

பூமி இங்கு பூ பூக்கும் ! என அப்படியே நம்பிக்கையின் விதைகளையும் ஆழமாய் நட்டுச் செல்கின்றன அவரது விரல்கள்.

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும்
தந்தை அன்பின் முன்னே,
தாலாட்டுப் பாடும் தாயின் அன்பும்
தந்தை அன்பின் பின்னே !

என தாயன்பையே இரண்டாம் இடத்தில் தள்ளி எழுதத் துணியும் நா.மு ஒரு தந்தையாகவும் அப்படியே வாழ்ந்தார் என்பதே உண்மை !

இன்றும் எனது தொலைபேசியில் காலர் டியூனாக இருப்பது ஆனந்த யாழை மீட்டுகிறாய் பாடல் தான்.

இரு நெஞ்சம் இணைந்து பேசிட உலகில்
பாஷைகள் எதுவும் தேவையில்லை
சிறு புல்லில் உறங்கும் பனியில் தெரியும்
மலையின் அழகோ தாங்கவில்லை !

எனும் பாடல் இன்றும் மனதில் சொல்லாத பக்கங்களிலெல்லாம் நெகிழ்வை இறக்கிக் கொண்டே இருக்கிறது.

தனது வாழ்க்கையின் கடைசி காலங்களில் அவர் எழுதிய,

காற்றோடு விளையாட
ஊஞ்சல் எங்கே செய்கிறாய்
கடன் வாங்கி சிரிக்கின்ற
மானுட நெஞ்சைக் கொய்கிறாய்

என சிட்டுக் குருவியாகவே மாறி அவர் எழுதிய வார்த்தைகள் மனதை கனக்-கச் செய்கின்றன. கண்ணீரைச் சுமக்கச் செய்கின்றன. அவர் பாடு பொருள்களாகத் தேர்ந்தெடுக்கின்ற விஷயங்கள் தொடர்ந்த வியப்பைத் தந்து கொண்டே இருக்கின்றன.

காற்றில் இலைகள் பறந்த பின்னும்
கிளையின் தழும்புகள் அழிவதில்லை !
என்றும்,

கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்
இளைப்பாற மரங்கள் இல்லை

கலங்காமல் கண்டம் தாண்டும் ! என்றும் அவர் அனாயசமாக எழுதிச் சென்றவற்றை நினைத்துப் பார்க்கும் போது வியக்காமல் இருக்க முடியவில்லை.

முதலிலேயே சொன்னது போல, அத்தனைப் பாடல்களிலும் ஏதோ ஒரு வகையில் வியக்க வைத்து மாயம் செய்பவராக நா. முத்து குமார் வலம் வந்து கொண்டிருக்கிறார். அவர் மறைந்தாலும் அவரது பாடல்கள் இன்னும் ரசிகர்களால் கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

எங்கே வெயில் விழுகிறதோ, எங்கே அடைமழை பொழிகிறதோ, எங்கே தென்றல் வீசுகின்றதோ, எங்கே புழுதி பறக்கின்றதோ எங்கெல்லாம் நா.மு வின் கவிதை வரிகள் கை நீட்டி நிற்கின்றன. காற்றின் அலைவரிசைகளில் அவருக்கான களம் இன்னும் அப்படியே தான் இருக்கிறது. ஒரு கவிஞனின் இடத்தை இன்னொரு கவிஞன் இட்டு நிரப்பலாம். ஆனால் ஒரு சகாப்தத்தின் இடைவெளியை இன்னொருவரால் நிரப்பவே முடியாது ! நா.மு அப்படி ஒரு சகாப்தமாக வாழ்ந்து மறைந்தவர்.

அவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்திருக்கலாம், தமிழைச் செழுமைப் படுத்தியிருக்கலாம் எனும் நப்பாசை ஒரு புறம் இருந்தாலும், கிடைத்த காலத்தைச் செம்மையாய்ப் பயன்படுத்தியிருக்கிறார் எனும் ஆறுதலும் ஒரு புறம் எழாமல் இல்லை. !

ஒரு நண்பனாகவும், ஒரு ரசிகனாகவும், ஒரு தமிழனாகவும் என்னை அதிகம் ஈர்த்தவர், என்னை அதிகம் கலங்க வைத்தவர் நா.மு ! அவர் வாழ்கிறார், அவரது பாடல்களின் வழியாகவும் கவிதைகளின் வழியாகவும்.











# ஒரு ராணியைப் போல

நான் ஒன்றும் அத்தனை நடைப்பிரியை இல்லை. நடனத்தைத் தவிர வேறு எதற்காகவும் உடம்பை அசைக்க விரும்பும் ஆள் இல்லை. அப்பப்போ நண்பர்களின் வேண்டுதலுக்கு இணங்க நோர்வேயில் உள்ள சில மலை உச்சிகளுக்குச் சென்றுள்ளேன். அந்தப் பயணங்கள்கூட நடனம் சார்ந்து இருப்பது வழமை.

இந்த நெடிய பயணத்தைத் தொடங்குமுன் சில நாட்கள் மட்டும் ஓரிரு மணித்தியாலங்கள் வரை அப்பப்போ நடந்துள்ளேன். ஏறத்தாழ எட்டில் இருந்து பத்துக் கிலோ எடை உள்ள முதுகுப்பொதியுடன் ஜுன் இருபத்தி நான்காம் திகதி தொடங்கிய இந்தப் பயணம், 300 கிலோ மீற்றர் தாண்டி நேற்று இனிது முடிந்தது. எக்காரணம் கொண்டும் இடையில் வாகனம் எடுப்பதோ, முதுகுப் பொதியை யாரிடமும் கொடுத்து அனுப்புவதோ இல்லை என்ற முடிவோடு தான் கிளம்பினேன்.

தினமும் கடல், காடு, மலை, ஓடை, வாகனப் பாதை, கிராமம், நகரம், தோட்டங்கள், வயல்வெளிகள் என்று பலவிதமான இயற்கை வனப்புகளுடனும், புதியபுதிய மனிதர்களுடனும் நடந்தது பெரும் அநுபவம்.

இந்த நீண்ட பயணம் போர்த்துக்கல்லிற் தொடங்கி ஸ்பெயினில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தேவாலயத்தில் நிறைவு பெறுகிறது. இந்தத் தேவாலயம் பற்றி வேறொரு பதிவில் எழுதுகிறேன்.

நேற்றைய தினம் 28 கிலோ மீற்றர்கள் நடந்து பயணத்தை நிறைவு செய்தோம். இப்பயணத்தின் தொலைவு மொத்தமாக 300க்கும் அதிகமான கிலோமீற்றர்கள்.

இப்பாத யாத்திரையை நிறைவு செய்தது என்னளவில் பெரும் சாதனையே!

நடன அரங்கங்கள் மூலம் கிடைத்த அனுபவங்கள், படித்துப் பெற்ற சான்றிதழ்கள் மூலம் கிடைத்த இன்பம் என்பவை வேறு, இந்தப் பயணத்தின் பின் கிடைத்த சான்றிதழின் இன்பமும் மன நிறைவும் வேறு. இந்த உணர்வை அனுபவத்திற்தான் கண்டடைய முடியும்.

சில வருடங்களுக்கு முன், பெரும் ஓவியர் ஒருவர் என்னை ஒரு ராணியைப் போல ஓவியம் வரைந்து எனக்குப் பரிசளித்தார். அந்த ஓவியம் அளவிற் பெரியது என்பதாலும் அதில் உள்ள ராணி போன்ற தோரணையும் அந்த ஓவியத்தை வீட்டில் மாட்டி வைக்க கொஞ்சம் கூச்சமாக இருந்தது. அதனால் இன்றுவரை அந்த ஓவியம் சுருட்டப்பட்டு எனது அறையின் ஒரு மூலையில் இருக்கின்றது. இச் சாதனையின் பின் ஒரு ராணியைப் போன்ற அந்த ஓவியத்தைச் சுவரில் மாட்டி வைக்க மனம் துணிந்திருக்கிறது. வீட்டிற்கு போனவுடன் ஓவியத்தைச் சுவரில் மாட்டி வைப்பதாக உத்தேசம்.

பயணங்கள் இனிது, பாத யாத்திரைகள் அதனிலும் இனிது.அடுத்த இதழில்..




கவிதா லட்சுமி (நோர்வே)



# ஊர்க் கொண்டாட்டமும் பாட்டுச் சத்தமும்

"இவன் காசு வையான்" என்று
இந்த நிகழ்வுகளில்
ஏழைகளுக்கு இடமில்லை.

இருதய நோய்க்காரருக்கு
இருநாள் விழிப்பிருக்கும்.

பரீட்சைக்குத் தயாராகும்
பள்ளி மாணவர்க்கு
படாத பாடிருக்கும்.

முற்பகை ஊராரை
முகம்சுழிக்க வைக்க
கொண்டாட்ட வீட்டுக்காரன்
கொடுத்திரான் அழைப்பிதழ்.

இந்த இரண்டு நாளும்
எங்களூரில்
வானொலிகளுக்கு
வேலையில்லை.

"எத்தின நிகழ்வுக்குத்தான்
வைக்கிறது காசு"
பண நெருக்கடிக்காரனின்
பழக்கப்பட்ட புலம்பல்.

கொஞ்ச காசு வைத்தாலும்
குடும்பமாய் உண்டுவர
ஆயத்தமாகும் ஆட்கள்.

வீட்டுச் சமையலுக்கு
விடுமுறை கொடுத்து
கொடுத்த காசுக்கு
குறைவின்றி
கம்பீரமாய் உண்போர்.
"என்வீட்டு நிகழ்வுக்கு
வந்தான்" என
இருமடங்காய் மொய்யெழுத
கடனெடுத்தாவது
காசுவைக்க சிலர்.....

"சொல்லி வராதவனை
எட்டிப் பாரேன்" என
திட்டமிட்டு புறக்கணிக்கும்
அயல் வீட்டான்.

"மொய்ப்பண வருகை
கூடவேணும்"
கொண்டாட்டத்துக்கு
கடன் கொடுத்தவன்
வேண்டுதல்.

நட்சத்திர மின்குமிழ்கள்
பொரித்த அரிசிச்சோறு
வறுத்த கோழிக்கறி
கொண்டாட்டம் கொண்டாட்டம்.
காலையிருந்து சாப்பிடாத
கண்தெரியா ஆச்சி
பட்டினியாய் கொட்டிலில்.
விதவையான முதியவளுக்கு
ஒருபொதி சோறனுப்ப
ஒருவருக்கும் மனசு வரல......


யோ.புரட்சி
(வள்ளுவர்புரம், இலங்கை)







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நாம் ஏன் வேலைகளைத் தாமதப்படுத்துகிறோம்? அல்லது தள்ளிப்போடுகிறோம்!

நீங்கள் ஒரு கடிதம் ஒன்றை இன்று தபால் நிலையத்திற்குக் கொண்டு போய் அனுப்பவேண்டும், ஆனால் பரவாயில்லை அதை நாளை அனுப்புவோம் என்று முடிவு செய்கின்றீர்கள். நாளை அதே கடிதத்தைக் கண்டதும், சரி பரவாயில்லை அடுத்த நாள் அனுப்புவோம் என்று நினைத்து விட்டு அதை அனுப்புவதை மீண்டும்



தாமதப்படுத்துகின்றீர்கள். இப்படியே அதை அனுப்புவதைப் பல நாட்களுக்குத் தள்ளிப்போடுகின்றீர்கள். இதைப் போல் நீங்களும் பல விஷயங்களைத் தள்ளிப் போட்டிருப்பீர்கள், சரி தானே? இதற்கு என்ன காரணம்? குறிப்பாக வேலைகளைத் தள்ளிப்போடுவதற்கான அறிவியல் ரீதியான காரணம் என்ன?

தள்ளிப்போடுதல் அல்லது ஆங்கிலத்தில் procrastination என்பது பணிகளை வேண்டுமென்றே தாமதப்படுத்துவது அல்லது ஒத்திவைப்பதைக் குறிக்கும். இது ஒருவரின் உற்பத்தித்திறனைக் குறைத்து தேவையற்ற மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும். தள்ளிப்போடுதலுக்கு விஞ்ஞானிகளின் கருத்துப்படி பல்வேறு உளவியல் மற்றும் அறிவாற்றல் காரணிகள் உள்ளன.

### முதலில் உளவியல் ரீதியான சில காரணிகளைப் பார்ப்போம்:

உடனடி திருப்தி: மனித மூளை உடனடி வெகுமதிகளைத் தேடுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது எப்போதுமே குறுகிய கால திருப்திக்குத் தான் நீண்ட கால நன்மைகளை விட முன்னுரிமை அளிக்கும். எனவே நாம் எப்போது வேலைகளைத் தள்ளிப்போடுகின்றோம் என்றால், நமக்கு மிகவும் இனிமையான சின்ன சின்ன விஷயம் உடனடியாக அடையக்கூடியதாக இருந்தால், அதை நோக்கித் தான் நமது மூளை போகும்.

தோல்வி பயம்: தள்ளிப்போடுதல் என்பது தோல்வியைத் தவிர்க்கக்கூடிய ஒரு பாதுகாப்பு பொறிமுறையாக இருக்கலாம்.

செம்மை வாதம்: எல்லாவற்றிலும் திறமையாக செயல்புரியவேண்டும் என்று நினைப்பவர்கள் அவர்களின் வேலைகள் தொடங்குவதை தாமதப்படுத்துவர்.


### அடுத்து அறிவாற்றல் ரீதியான காரணிகள் பார்ப்போம்:

நேர நிர்வாகம்: திட்டமிடல் மற்றும் நேர ஒதுக்கீட்டில் மோசமான செயல்திறன் வேலைகளைத் தள்ளிப்போடுவதற்குப் பங்களிக்கலாம். தெளிவான காலக்கெடு, கட்டமைப்புகள்அல்லதுபணிக்கான தேவையான நேரத்தின் புரிதல் இல்லாமல், அதைச் சரியான நேரத்தில் தொடங்கி முடிக்கக் கடினமாக இருக்கக்கூடும். எனவே அவ்வேலைகளைத் தள்ளிப்போடத் தோன்றும். கட்டுப்பாட்டின் பற்றாக்குறை: தள்ளிப்போடுதல் என்பது சுய கட்டுப்பாட்டில் சிரமங்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம், குறிப்பாக அத்தகைய தூண்டுதல்களைக் கையாளுதல், திசைதிருப்பல்களை எதிர்த்துப் போராடுதல் மற்றும் கவனம் செலுத்துவது. இந்த சுய கட்டுப்பாட்டுச் சவால்கள் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன மற்றும் பணி ஒத்திவைப்பதற்கு வழிவகுக்கின்றன.

சரி வேலைகளைத் தள்ளிப்போடுவதற்கான காரணங்களைப் பார்த்துவிட்டோம். இனி தள்ளிப்போடுவதை மீறுவதற்கான வழிகள் என்ன என்பதைப் பார்ப்போம்:

சிறு பணிகளாகப் பிரித்தல்: வேலைகளை இலகுவாகச் செய்யக்கூடிய சிறிய வேலைகளாகப் பிரித்துச் செய்தால் நாம் செய்யவிருக்கும் வேலையில் முன்னேற்றம் தெரிந்து கொண்டே இருக்கும். இது ஒரு வேலையைத் தொடங்கவும் தொடரவும் வழி வகுக்கும்.

குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் காலக்கெடு அமைத்தல்: இலக்குகளைத் தெளிவாக வரையறுத்து, யதார்த் தமான காலக்கெடு அமைப்பதின் மூலம் பணிகளைச் சரியான நேரத்தில் முடிக்க ஒரு தெளிவான கவனம் அளிக்கிறது. திசைதிருப்பல்களைக்



குறைத்தல்: தனிப்பட்ட திசைதிருப்பல்களை அடையாளம் கண்டு குறைப்பது, உதாரணத்திற்கு கை தொலைப்பேசியின் சத்தத்தை நிறுத்தி விட்டு வேலைகளைப் பார்ப்பதன் மூலம் கவனம் செலுத்தவும் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் உதவும்.

கட்டுப்படுத்தப்பட்ட வழக்கங்களைப் பயன்படுத்துதல்: வழக்கமான வழக்கங்கள் மற்றும் பழக்கங்களை உருவாக்குவது, உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் தள்ளிப்போடுவதைத் தவிர்ப்பதற்கும் சாதகமான சூழலை உருவாக்குகிறது.

தள்ளிப்போடுதல் ஒரு உலகளாவிய சவால்,ஆனால் அதன் உளவியல் மற்றும் அறிவாற்றல் வேர்களைப் புரிந்துகொள்வது தனிநபர்களுக்கு இந்த பழக்கத்தை மீற உதவும். பயனுள்ள வழிகளைப் பயன்படுத்துவதன் மூலம், நீங்கள் உற்பத்தித்திறனை மேம்படுத்தலாம், மன அழுத்தத்தைக் குறைக்கலாம் மற்றும் உங்கள் இலக்குகளை அடையலாம். இறுதியில் இதனால் ஒரு வெற்றிகரமான வாழ்க்கையை நோக்கிச் செல்லலாம்.



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)




நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2023 ஆம் ஆண்டின் அதி உன்னத புத்தம் புது டிசைன்கள் எமது கையிருப்பில்



பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்தற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425




## திருமணத்திற்கான உங்கள் தேர்வை....

# நீங்களா கொண்டு வந்தால், நாங்கள் தலையாட்டுகின்றோம் என்னும் நிலைமைக்கு எமது தலைமுறை வந்துவிட்டது!

### எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.


*எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
*எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
* எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
* உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
* எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு
*எதை நீ படைத்திருந்தாய்?அது வீணாவதற்கு
*எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது .
* எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது .
* எது இன்று உன்னுடையதோ
அது நாளை அடுத்தவருடையது ஆகிவிடும்,
* மறு நாள் அது வேறொருவருடைய தாகின்றது.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இது யோகநூல் பகவத்கீதையின் கீதாசாரம். இது எவ்வளவு பெரிய உண்மை. இது புரிந்தும் புரியாமலேயே மனிதர்கள் அலட்டிக் கொள்ளுகின்றார்கள். இந்த கீதா சாரத்தை வைத்துக் கொண்டே இன்றைய இந்தியப் பாடகர்களின் வருகையைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம்.

அறிவே தெய்வம் என்றார் தாயுமானவர். அந்த அறிவு சிந்தனைத் திறன்மிக்கதாகவும், காலத்துக்கேற்ப பட்டைதீட்டப்பட்டதாகவும், ஊரோடு ஒத்து வாழக்கூடியதாகவும் இருந்தாலேயே எமது வாழ்க்கைப் பண்பாடானது பண்பட்ட பண்பாடாக அமையும். சிந்தனையில் மாற்றம் கொண்டுவந்தால் மாத்திரமே கால ஓட்டத்திற்கேற்ப எம்மை ஈடுகொடுக்க முடியும். இந்தப்பண்பாட்டுக்கும் கீதையின் சாரத்துக்கும் இந்தியக் கலைஞர்களின் வருகைக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்று நோக்குவோம்.

**மக்களுடைய சோர்வுகளைப் போக்கி அவர்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்துவன விழாக்கள்.**

ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமல்ல ஆசிய நாடுகளுக்கும் இந்தியக் கலைஞர்களின் குறிப்பாகப் பாடகர்களின் படையெடுப்பு அதிகரித்துள்ளது. இதுதான்தற்காலத்தில் Trend. விளம்பரக் கவர்ச்சியும், நாங்




களும் போனோம் என்னும் பெருமையும், Instagram, Facebook, WhatsApp போன்ற இணையத்தளங்களில் பதிவிட்டு நாங்கள் இசையை மிதமாக விரும்புகின்றோமோ இல்லை இசைக்காகக் கூடுகின்ற கூட்டங்களை விரும்புகின்றோமோ என்பதை வெளிப்படுத்தப் பதிவிடுவதும், நடைமுறையாக உள்ளது என்பாரும் உண்டு. ஆனால், இது பற்றி யாரும் விமர்சிக்க முடியாது. இதுதான் தொழில்நுட்பம் எமக்குத் தந்திருக்கும் வாய்ப்பு. இதற்குள் இருக்கும் சூக்குமத்தை, நன்மையை மட்டுமே சீர்தூக்கிப் பார்ப்போம்.

புலம்பெயர்ந்து மக்கள் அடுத்த தலைமுறை கண்டுவிட்டனர். தமது வாரிசுகள் வளர்ந்து நிமிர்ந்து தத்தம் உழைப்பில் உயர்ந்து நிற்கின்றனர். இவர்களுக்குத் தேவையான பொழுதுபோக்கு அம்சம் எங்கே கிடைக்கப் போகின்றது. ஆடலாம், பாடலாம், ஆனந்தக் கூத்தாடலாம் என்றால், யார்தான் தயங்கப் போகின்றார்கள். எமது தலைமுறையானது தமது சமூகத்தை ஒன்று கூட்டுவதற்காக விழாக்களையும் பண்டிகைகளையும், கோயில் திருவிழாக்களையும் நடத்தியிருக்கின்றது. மக்களுடைய சோர்வுகளைப் போக்கி அவர்களுக்குப் புத்துணர்ச்சியை ஏற்படுத்துவன விழாக்கள். கோயில் திருவிழாக்களில் தம்முடைய இன மக்கள் ஒன்று கூடித் தேர் இழுப்பது ஒரு காரணமாக இருந்தது.



ஆனால், இங்கு எத்தனை தேர்கள் மனதால் இழுக்கப்பட்டன என்பது அறியாதவர்கள் இல்லை. செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கை அம்மனுக்கு கன்னிகள் விரதம் இருந்து காளைகளைத் திருமணம் செய்த நிகழ்ச்சிகள் எம் மனக்கண்ணில் வந்து போகின்றன. ஆணென்று இருந்தால், பெண்ணென்று இருந்தால், காதல் என்பது கட்டாயம். அக்காதல் chemistry யானது கண்டாலும், காணும் சந்தர்ப்பத்தைப் பெற்றாலும், ஏதோ ஒரு ஈர்ப்பைப் பெற்றாலுமே ஏற்படும் அல்லவா! இதற்கு இவ்வாறான இசை நிகழ்ச்சிகள் கைகொடுக்கின்றன.




**“கண்ணின் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு மாமலையும்
ஓர் கடுகாம்“ –
(பாரதிதாசன்)**

இந்த 250 ஒயிரோக்கள் ஆண்களுக்குப் பெரும் பணமா?

இந்தப் பிள்ளைகளுக்கு எம்மால் வரன் தேட முடியாது. இப்பிள்ளைகள் சொல்லுகின்ற காரணங்களைப் பட்டியலிட்டால், எந்த உலகத்தில் இருந்து நாம் மாப்பிள்ளை, மணமகள் கொண்டு வரமுடியும். நீங்களா கொண்டு வந்தால், நாங்கள் தலையாட்டுகின்றோம் என்னும் நிலைமைக்கு எமது தலைமுறை வந்துவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி இருக்கும் இந்த இளந்தலைமுறையினரைக் கொண்டு அடுத்த தலைமுறையை விரிவு படுத்த வேண்டுமென்றால், இவ்வாறான சந்திப்புக்கள் அவசியமாகின்றன.




அன்றையநாள் தாயகத்தில் கோயில் திருவிழா வரப் போகின்றது என்றால், ஆண்களும் பெண்களும் அதற்காகவே புதிய ஆடைகள் தைப்பதும், அலங்காரங்கள் செய்வதும் வழக்கம். தலைநிறையப் பூச்சூடி,

28 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

### கடைசி மன்னனான சங்கிலி மன்னன் வீழ்ந்த காலத்திலிருந்து

# எங்கள் இனம் சுதந்திரமின்றி ஓடிக்கொண்டிருக்கின்றது



செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்- இலங்கை

வரலாற்று அடையாளங்களை சரியாகப் பேணாவிட்டால் அதை புனைவதற்கு ஒரு அணி தயாராகவுள்ளது என சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 16.07.2023 நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் திறப்பு விழாவில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் பற்றி எமக்கிருக்கின்ற சான்றாதாரங்களாக இலக்கியங்களும் தோரண வாயில் போன்ற சான்றுகளும் இன்றும் எம் கண்முன்னே இருக்கின்றன. யாழ்ப்பாண வைபவ மாலையில் ஆண்ட மன்னர்கள் கோயில்களை எவ்வாறு கட்டினார்கள் என்பதை ஆராய்வதற்கு உதவியாக உள்ளது.

கடைசி மன்னனான சங்கிலி. மன்னன் வீழ்ந்த காலத்திலிருந்து நாம் இடப்பெயர்வுகளைச் சந்தித்துக்கொடிருக்கின்றோம். தமிழ் மன்னன் என்று வீழ்ந்தானோ அன்று முதல் எங்கள் இனம் சுதந்திரமின்றி விடிவின்றி ஓடிக்கொண்டிருக்கின்றது.

மொழிக்காக இனத்திற்காக பண்பாட்டிற்காக பலர் தமது உயிரையும் வாழ்வையும் அர்ப்பணித்தனர். எனவே அடையாளச் சின்னங்களை நாம் காப்பாற்றவில்லையெனின் அது துர்ப்பாக்கிய நிலைக்குரியது.

எம் மத்தியில் பல வரலாற்று அடையாளச் சின்னங்கள் காணப்பட்டாலும் அதை அறியாமல் பலருள்ளனர். யமுனா ஏரிக்கு அண்மையிலே நல்லூர் ஆலய அத்திவாரம் காணப்பட்டது ஆனாலும் இன்று அங்கு தேவாலயம் எழுந்து நிற்கின்றது.

35ஆண்டுகளாக சேர்த்த தொன்மைப் பொருட்களை பாதுகாக்க அருங்காட்சியகங்களை அமைக்க அரசியல் தலைவர்கள் உட்பட பலரிடம் உதவி கோரிய போதும் யாரும் முன்வரவில்லை. இறுதியில் பாரிய முயற்சியில் நாவற்குழியில் அரும்பொருட்காட்சியகம் அமைக்கப்பட்டது. அங்கு 23 தமிழ் மன்னர்களுக்கு சிலை வைத்து வரலாறு களைப் பொறித்தோம். அதற்காக பல முறை யார் அந்த மன்னர்கள் எனவும் எங்கிருந்து நிதி பெறப்பட்டதென விசாரணைக் குட்படுத்தப்பட்டேன்.

மரபுரிமைச் சொத்து அரசியலுக்கானதல்ல இனத்திற்கானது. வரலாற்று அடையாளங்களை சரியாகப் பேணாவிட்டால் அதை புனைவதற்கு ஒரு அணி தயாராகவுள்ளது.எனவே வரலாற்று தொன்மைகளைப் பாதுகாக்க அனைத்து கல்விமான்களும் முன்வர வேண்டும என்றார்.














## யேர்மனி குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு சென்று வழிபட்ட இசைஞானி இளையராஜா

இளையராஜா அவர்கள் கடந்த மாதம் யேர்மனிக்கு இசை நிகழ்ச்சி நடத்த வந்த வேளை,குமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயத்திற்கு வருகைதந்து 30.06.2023 வழிபட்டார்.

வழிபாட்டின் பின் அடியவர்கள் மத்தியில் உரையாற்றிய இசைஞானி,எந்த நாட்டிற்கு இடம் பெயர்ந்தாலும், நமது பண்பாடு, வழிபாடுகள் இவற்றைத் தொடர்வது, மகிழ்ச்சியானது. இப்படி ஆலயங்கள் வெளிநாடுகளில் அமைப்பது, சுலபமும் அல்ல என்றார்.

இசை நிகழ்ச்சிக்கு முன் முருகன் பிரசாதம் பெற்றது, முருகன் ஆசி கிடைத்தது போன்று என்றார். அத்துடன் அவர் வருகை நினைவாக ஒரு மரம் ஒன்றினை ஆலயத்தில் நாட்டிவைத்தார்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.




# கனடா தமிழர் தகவல் சஞ்சிகையின் 32 வது ஆண்டு விருதுவிழா

விருது பெற்றவர்கள் இணைந்து கூட்டாக நிற்கும் ஒளிப்படத்தில் திரு.நீதன்.சண், திரு.ஆர்.ஆர்.ராஜ்குமார் ஆகியோரும் உள்ளனர்.



திரு எஸ்.திருச்செல்வம்
"தமிழர் தகவல்"
முதன்மை ஆசிரியர்

கனடாவின் மூத்த தமிழ் இதழான 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 32வது ஆண்டுப் பூர்த்தி விழா ஜுலை 08ம் திகதி சனிக்கிழமை ரொறன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா பீடத்தில் இடம்பெற்றது. 32வது ஆண்டு மலர் வெளியீட்டுடன் ஆரம்பமான நிகழ்ச்சிக்கு தகவலின் உதவி ஆசிரியர் செல்வி அனோஜினி குமரதாசன் தலைமை தாங்கினார். டாக்டர் மேரி கியூரி ஃபோல் மலரை வெளியிட்டு வைத்து உரையாற்றினார்.

கனடியத் தமிழர் சமூகத்தில் விருதுகள் வழங்கிக் மதிப்பளிக்கும் பாரம்பரியத்தை



தமிழர் தகவல்
உதவி ஆசிரியர்
அனோஜினி குமரதாசன்.

தமிழர் தகவல்; சஞ்சிகையே முதன்முதலில் 1992ம் ஆண்டில் ஆரம்பித்தது. கடந்த 32 ஆண்டுகளில் சமூகப்பணி, பொதுப்பணி, கல்விப்பணி, கலை இலக்கியப்பணி, ஊடகப் பணி, அகதிகள் சேவை போன்றவற்றில் ஈடுபட்ட 279 பிரமுகர்கள் விருதுகள் வழங்கி தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டனர். தன்னார்வத் தொண்டு மற்றும் தலைமைத்துவப் பண்பு கொண்ட இளையோரும், தமிழ்க் கனடிய வணிகத்துறை முன்னோடிகளும் இவர்களுள் அடங்குவர். தமிழரல்லாத பன்முக சேவையாளர்கள் பத்துப்பேர் "தமிழர் தகவல்; விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஐ.நா. சபையின் சமாதானத் தூதுவராகப் பணியாற்றும் கிம் புக் (Kim Phuc) அம்மையார் அவர்களுள் முக்கியமானவர்.

தமிழர் தகவலின் வாழ்நாள் சாதனையாளர் விருதினை இதுவரை பதினான்கு சான்றோர் பெற்றிருக்கின்றனர்.

இவ்வாண்டுக்கான வாழ்நாள் சாதனையாளர் விருது சர்வதேச புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. அ.முத்துலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. கனடாவில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்கள் தமிழ் எழுத்துலகில் அறுபது ஆண்டுகள் பயணித்திருப்பதை கொண்டாடும் முகமாக இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.

இவ்வாண்டிற்கான சாதனைத் தமிழன் விருது யாழ்ப்பாணத்தில் தனது தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் டான் தொலைக்காட்சியின் நிர்வாக இயக்குனரான திரு.எஸ்.எஸ்.குகநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இலங்கையில் மட்டுமல்லாது புலம்பெயர் தமிழர் வாழ்விலும் ஊடகத்துறையில் அச்சு மற்றும் இலத்திரனியல் பரப்பில் முன்னோடிச் சாதனைகளை புரிந்தவராக திரு. எஸ்.எஸ்.குகநாதன் அவர்கள் திகழ்கிறார். தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவகும் ஈழநாடு தினசரியின் ஆசிரியராகவும் திரு.குகநாதன் பணியாற்றுகிறார்.

தமிழர் தகவல் சிறப்பு விருது ஆஸ்திரேலியாவில் வதியும் திருமதி பராசக்தி சுந்தரலிங்கம் அவர்களுக்கும், கலைத்துறை விருது திருமதி ஜெயராணி சிவபாலன் அவர்களுக்கும், சமூகசேவை விருது திரு ஜெயசிங் டேவிட் அவர்களுக்கும், முதன் நிலை இளையோர் சாதனைவிருது டாக்டர் ஜனகன் சிறீரஞ்சன் அவர்களுக்கும், தொழில்துறை முன்னோடி விருது திருமதி அபி அமலன் மற்றும் திருமதி ரஜினி நாதன் இருவருக்கும் வழங்கப்பட்டது.





திரு.அ. முத்துலிங்கம், திரு.எஸ்.எஸ்.குகநாதன் ஆகியோர் விருது பெறுதல் ....

24 ஆம் பக்கம் பார்க்க...








# 1000 இயக்குனர்களை உருவாக்கும் பயணம்



இயக்குனர்
**மதிசுதா**
இலங்கை
(வெந்து தணிந்தது காடு)



இது கற்பனைக்கு எட்டாத தூரமாக இருக்கலாம் ஆனால் கற்பனை செய்யக் கூடாத முயற்சி இல்லைத் தானே.

கடந்த 2 வருடங்களாக ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சென்று இலவசமாக இதைச் செய்து வருகின்றேன்.

இதன் மூலம் “பணமில்லாவிடினும் இருக்கும் வளத்தை வைத்து ஒரு சினிமாவை எப்படி உருவாக்கலாம்“ என்ற தொனிப் பொருளில் நான் கடந்து வந்த 10 வருட கரடுமுரடான பயணத்தினூடான அனுபவங்களை வைத்து அவர்களுக்கு கடத்திக் கொண்டிருக்கின்றேன்.

450 பேரைக் கடந்து நகரும் எனது பயணத்தில் முதல் முதல் திருமலை மாவட்டத்தில் இந்த பட்டறையை செய்திருந்தேன். 22 மாணவர்கள் கலந்து கொண்டிருந்த இந்த நிகழ்வில் மாணவர்களின் ஆர்வமும் கேள்விகளும் பெரு நம்பிக்கை அளிப்பதாக அமைந்திருந்தது.

இளைஞர்களை தவறான பாதைக்கு செல்லாமல் எங்கள் மொழி, வாழ்வியல், பண்பாடுகளை இன்னொரு மொழிக்கும் தலைமுறைக்கும் கடத்தும் கலை வடிவங்களுக்குள் புகுத்தி எமக்கான ஆரோக்கியமான எதிர் காலத்தைக் கட்டி எழுப்புவோம். இதே எண்ணங்கொண்ட “தளம்“ அமைப்பு இதை ஏற்பாடு செய்து தந்திருந்தது. இதற்கு முதற் காரணமான சகோதரன் மதன் , அருசா மற்றும் கஜன் ஆகியோருக்கும் எனக்கு அறிமுகமில்லாமல் இதை ஒழுங்கமைத்த அனைவருக்கும் எனது உளப்பூர்வ நன்றிகள்.

இந்த பயணத்தில் 5 வருடத்திற்கு முதல் இணைந்து இன்று எனக்கு பதிலாக பயணத்தை தொடர என்னுடன் பயணிக்கும் முரசரவுமு க்கும் நன்றிகள்.

உங்கள் ஊர்களுக்கும் எந்நேரமும் வரத் தயாராகவே இருக்கின்றேன். ஆர்வமுடையோர் 10 பேரை சேர்த்து விட்டு அழையுங்கள். (இலங்கையில்)

---

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கனடா தமிழர் தகவல் சஞ்சிகையின்.....

விழாவின் சிறப்பு விருந்தினராக ரொறன்ரோவின் புதிய மேயராக தெரிவு செய்யப்பட்ட திருவாட்டி ஒலிவியா செள (Olivia Chow) பங்குபற்றி விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.புதிய மேயராக வெற்றி பெற்றபின்னர், உத்தியோகபூர்வமாக இன்னும் பதவி ஏற்காத நிலையிலும் தனது நகரசபை மண்டபத்தில் தான் கலந்து கொள்ளும் முதலாவது நிகழ்ச்சியாக “தமிழர் தகவல் விருது விழா அமைந்திருக்கிறது என்பதை ஒலிவியா செள தமதுரையில் பரவசத்துடன் பகிர்ந்து கொண்டார். 1991ம் ஆண்டு ரொறன்ரோவில் ஆரம்பிக்கப்பட்ட “தமிழர் தகவல்; சஞ்சிகை ஆரம்பம் முதல் இன்றுவரை ஒவ்வொரு மாதமும் 5ம் திகதி தவறாமல் வெளிவருகின்றது. இதன் முதன்மை ஆசிரியரான திரு எஸ்.திருச்செல்வம் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் இரண்டு தினசரி பத்திரிகைகளை ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய மூத்த ஊடகவியலாளர்.



விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



திரு.பால்ராஜ்ச்நெறியாள்கையில்"பைத்தியம்"நாடகம்ஈழத்தில் போருக்குப்பின்னால் ஒரு பைத்தியமான நிலைக்கு எம் மக்கள் தள்ளப்பட்டு நிற்பதை சுட்டகாட்டி நின்றது. அனைவரும் சிறப்பாக நடித்திருந்தார்கள் குறிப்பாக ஓர் குழந்தை நட்சத்திரம் நடித்திருந்தான் மிக அழகாக தன்னுடைய பாத்திரத்தை நடித்திரு தந்தான் அத்துடன் அவரின் வளர்ப்பு தாயாக நடித்தவரும் சிறப்பான முறையில் நடித்திருந்தார் அத்துடன் பால் ராஜ் அண்ணா ஓர் சிறந்த நாடக்கக்கலைஞர் மட்டுமல்லாது ஓர் சிறந்த ஒப்பனையளர் என்பதையும் ஒவ்வெறு பாந்த்திரத்தின் ஒப்பனை முலமாக வெளிப்படுத்திருந்தார் இந்த பன முறையில் நடித்திருந்தனர்.

இயக்குனர் திரு. சிவவிவனோதனின் "தீர்த்துகள்"என்னும் நாடகம். அவரும் தன் தனிநடிப்பால் பார்வையாளர்களை கவர்ந்தார். இளம் தலைமுறைகள் நாடகக்கலைக்குள் இருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. அடுத்ததாக எனது இரஜ்குமார் தெட்ச ணாமூர்த்தி இயக்கத்தில் "யாரிடம் செல்வோம் யாரிடம் சொல்வோம்" இது நான் இயக்கி நடித்தபடியால் பின்னூட்டல் என்னால் கூற முடியாது. ஆனல் என்னுடன் நடித்த சக கலைஞர்களுக்கும் முக்கியமாக எனது மனைவிக்கும் எனது நன்றிகள் பல.

திரு.தியான்.இயக்கத்தில் "போதை"

# யேர்மனி பிராங்போர்ட் நகரில் நாடகத்தென்றல் 2023

## இராஜ்குமார் தெட்சணாமூர்த்தி அவர்களின் பார்வையில்..

ஜேர்மனியின் பிராங்போர்ட் நகரில் 20.05.2023 அன்று நாடகத் தென்றல் மற்றும் துகள் அமைப்பு இணைந்து நடாத்திய நாடக விழா மிக சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவில் நடிக்கப்பட்ட நாடகங்கள் அனைத்தும் எங்கள் ஈழத்தின் வலிகளையும் புலம் பெயர் வாழ் மக்களின் உணர்வுகளையும் நிலை நிறுத்தி நின்றது.

இந்நிகழ்வில் முதலாவதாக திரு. வே.கெங்கேஸ்வரனின் குறியீட்டு ஓரங்க நாடகமான" புழுதி படிந்த தேகம்" இதந்த நாடகம் மிகச்சிறப்பான முறையில் பார்ப்பவர்களுக்கு எளிதில் விளங்கக் கூடியவாறு சில பொருற்களைப்பயன்படுத்தி நடித்திருந்தார் உண்மையில் எம்மக்களின் வலிகளை முள்ளி வாய்க்கா ளுக்கு முன்பு பின்பு என பின்னனி இசையுடன் தான் கதைக்க வேண்டிய இடத்தில் கதைத்தும் நடித்தும் இருந்தார்.

ஓர் தந்தையின் அஸ்தி அதாவது புலம் பெயர்ந்து வாழ்ந்து இறந்த தந்தையின் கடைசி ஆசை தான் பிறந்த ஈழ மண்ணிற்கு தனது அஸ்தி கெண்டு செல்லப்பட வேண்டுமென்பது அத்துடன் ஈழத்தின் ஓர் அழகான காதல் யுத்த காடையர்கள் அந்தக்கதலியை சீரலிப்பது,எமது ஈழ நிலங்கள் சுரண்டப்பட்டு எங்களுடைய எல்லைகள் சிறிதாக்கப்படல், எமது கனிய வலங்கள் சுரண்டப்படல், என பல விடயங்கள் நடிக்கப்பட்டது இறுதியாக எமது நிலம் எமக்கு வேண்டும் நாம் ஒன்று படவேண்டும் என முடித்தார்.ஆனால் அந்த அஸ்தி என்னாச்சு என்று கூறவில்லை ஆனால் தத்தரூபமான அவரின் நடிப்பு,எங்களின் அவலங்களையும் வேதனைகளையும் அவர் சொன்ன விதம் எங்கள கண்களை கலங்க வைத்தது.





நாடகத்தில் தர்மகர்த்தா பைத்தியமாக நடித்திருந்த திருமால் நடிப்பு மிகச்சிறப்பானது. ரானுவம் வர்ரான் ஓடுங்கடா எனும் வசனத்துடன் நடிப்பு சொல்ல வார்த்தை இல்லை அத்துடன் திருமதி அனிதா திருமாள் அவர்களும் ஓர் கலை ஆசிரியை பைத்தியமாக சிறப்பாக நடித்திருந்தார். மற்றுமொரு பெண்மணி அசல் பைத்தியமாக நாடக ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை நடித்திருந்தார்.அவர்களுடன் இன்னும் பல கலைஞர்களும் மிகச் சிறப் இளம் கலைஞர்களை வைத்து மிகச்சிறப்பாக இத்த போதை நாடகம் போதைக்கு அடிமையானவர்களை தேவதைகள் ஆண் தேவதை பென் தேவதை என மீட்டெடுத்து நல்ல பாதையோடு முடித் தமை சிறப்பான விடயம். நாடகத்தின் உரையாடல்கள், அவரவர் பாத்திரங்களை சிறப்பாக வெளிக்கொணர்ந்தனர். இதில் நகைப்பு சிரிப்புடனும், நடிப்புடனும் கீர்த் திகன் மற்றும் இணைந்து நடித்த இளம் தலை முறையினரும் சிறப்பாக நடித்திருந்தனர். போதை எனும் தீய சக்தி இளம் தலைமுறையை பாடாகப் படுத்துவதும் அதை அவர்கள் பாவிக்கலமா? வேண்டாமா? எனும் நடிப்பும் சிறப்பாக இருந்தது.

அடுத்த நாடகமாக இயக்குநர் செல்வராணியின் "கற்பூரச்சட்டியும் காவடியும்" நகைச்சுவையோடு தற்காலத்தில் புலம்பெயர் தேசத்தில் இருந்து ஈழ தேசம் விடுமுறைக்கு செல்பவர்கள் காட்டும் பகட்டு இங்கு கூறப்பட்டது அத்துடன்

28 ஆம் பக்கம் பார்க்க...





தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள
"பண்டாரவன்னியன் புத்தகசாலையில்"
ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:-
பண்டாரவன்னியன் புத்தகசாலை
இல., 113 பாடசாலை வீதி,
பண்டாரிகுளம், வவுனியா, இலங்கை
+94772244616

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தொடரும் புதைகுழி மாமங்கள்

இப்படுகொலைகள் தொடர்பாக இராணுவ சிப்பாய்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற வழக்கில், 8 இராணுவத்தினர் சந்தேகநபர்களாக இனங்காணப்பட்ட நிலையில், ஒருவர் பின்னர் நிரபராதியென விடுவிக்கப்பட்டதுடன் ஒருவர் இறந்துவிட்டார்.

தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், அவர்களும் குற்றமற்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு அனைவரும் விடுவிக்கப்பட்டார்கள். இது போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கும் நிலையில்தான் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் புதைகுழி தொடர்பாக சர்வதேச மேற்பார்வையில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், சர்வதேச நியமங்களுக்கமைய புதைகுழியை தோண்டும் செயற்பாடு




முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கு புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட ஆதாரங்கள் மிக அவசியமானவை. இந்த ஆதாரங்கள் எந்தளவுக்குப் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன என்ற கேள்வியும் மிக முக்கியமானது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் போர்க் குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிப்பதற்கான செயற்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. அதற்கான அலுவலகம் ஒன்றையும் அமைத்து, தொடா்ச்சியாக ஆதாரங்களைத் திரட்டும் செயற்பாடுகளையும் மனித உரிமைகள் பேரவை முன்னெடுத்து வருகின்றது. இதுவும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் சாதகமான ஒன்று. கொக்குத் தொடுவாய் விவகாரத்தில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான செயற்பாடுகளை தமிழக் கட்சிகள் போதியளவுக்கு முன்னெடுக்கவில்லை என்பது தெரிகின்றது.

கொக்குத்தொடுவாய் பகுதியில் கடந்த 29ம் தேதி குழாய் நீர் பொருத்தும் பணிகளுக்காக பிரதான வீதியோரத்தில் நீர்வழங்கல் அமைச்சினால் குழியொன்று தோண்டப்பட்டுள்ளது. இதன்போது, பெண்களின் உள்ளாடைகள் மற்றும் மனித எச்சங்கள் என சந்தேகிக்கப்படும் எச்சங்கள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்திற்கு விடயங்களை தெளி



வூட்டியதுடன், குறித்த பகுதியில் மனித புதைக்குழி உள்ளதா என்பது தொடர்பிலான பூர்வாங்க அகழ்வு பணி கடந்த (ஜுலை) 6-ஆம் தேதி இடம்பெற்றது.

இதன்போது, குறித்த இடத்திலிருந்து 13 பேருடையது எனக் கருதப்படும் மனித எச்சங்களை அதிகாரிகள் அடையாளப் படுத்தியிருந்தனர். இந்த நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஜுலை 14 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச கண்காணிப்பாளர் களைப் பொறுத்தவரையில் அவ்வாறு யாரையும் தம்மால் அழைக்க முடியாது என நீதிபதி கூறியிருக்கின்றார். ஆனால், சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாமாகவே இவற்றைக் கண்காணிப்பதற்கு வந்தால் அதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் நீதிபதி தெரிவித்திருக்கின்றார். அதேவேளையில் அகழ்வுப் பணிகளில் தொல்லியல் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களை இணைத்துக்கொள்வதற்கும் நீதிபதி இணங்கியிருக்கின்றார்.

நீதிபதியின் இணக்கத்தின் அடிப்படையில் சர்வதேச பிரதிநிதிகளைக் கண்காணிப்பாளராகக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை தமிழத் தரப்பினரும் முன்னெடுக்க முடியும். இந்தப் புதைகுழிகளின் பின்னணியில் உள்ள மர்மங்களை வெளிப்படுத்துவதற்கு இவை உதவலாம்.

நடைபெற்றது ஒரு இனப்படுகொலை என்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில், அதன் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றுக்கு இலங்கையை நிர்ப்பந்திக்கும் அவசியம் சர்வதேசத்துக்கு உருவாகும். இந்தப் புதைகுழி மட்டுமன்றி, வேறு இடங்களில் இருப்பதாகக் கருதப்படும் புதைகுழிகளில் புதைந்துள்ள மர்மங்களை வெளிக்கொண்டுவருவதற்கு விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் முக்கியம். அதற்கான அழுத்தங்கள் மட்டுமன்றி, முயற்சிகளும் தமிழர் தரப்பினரால் முன்னெடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் இது மற்றொரு மிருசுவில், அல்லது குமாரபுரம் படுகொலைகள் போல மறைந்துவிடுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக இருக்கும்!

---

## வெற்றிமணி வெளியீடு 28

# "வைகல்" நூல் வெளியீட்டு விழா!

**24.09.2023 ஞாயிற்றுக்கிழமை**

அன்பிற்கினிய உறவுகளே!

வருகின்ற புரட்டாதி மாதம் 24 ஆம் திகதி (24.09.2003) என்னுடைய எழுத்தில் "வைகல்" எனும் வாழ்க்கை வழிகாட்டி நூல் வெற்றிமணியின் 28வது வெளியீடாக வெளிவர இருப்பதனை மகிழ்வோடு அறியத்தருகின்றேன். சமூக அக்கறையோடு வாழ்வில் அன்றாடம் மிகமிகத் தேவைப்படுகின்ற அரிய விடயங்களை உள்ளடக்கிய பயன்தரு நூலாக அமைத்து இதனை எல்லோருடனும் பகிர்வதில் உளம் நிறைவடைகின்றேன்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்பிற்கவும், நேசத்தோடு கலந்துரையாடவும் அனைவரையும் உள்ளன்போடு அழைக்கின்றேன். இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வை சிறப்பிற்கும் வண்ணம் வரவேற்று அனைவருடனும் உரையாடக் காத்திருக்கின்றேன்!



அன்புடன் கிரிணி

**நேரம்:** மாலை. 4.00 மணி
**நிகழ்வு இடம்பெறும் இடம்:**
தமிழர் அரங்கம் (டோட்முண்ட்)
Rheinische Straße 76-80 | 44137 Dortmund





அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
வெற்றிமணி- ஜெர்மனி

Badmintion/Germany

# யேர்மனியில் விசையுறு பந்தினைப்போல பூப்பந்தாட்டத்தில் தடம்பதிக்கும் சிறுவர்கள்!









**பிரசாந்தன் (யேர்மனி)**

"விசையுறு பந்தினைப்போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடல்கேட்டேன்...." என்ற மகாகவி பாரதியின் சக்தியை நோக்கிய வேண்டுதலை நாம் அறிவோம். சமூகவிடுதலைக்காக தமிழ் இலக்கியத்தை ஆயுதமாக்கி எடுத்தாண்ட எங்களின் அந்தத் தமிழ்க்கவிஞனின் வழிவந்த இரண்டு சிறார்கள் யேர்மனியில் விளையாட்டுத்துறையில் கடந்த இரண்டு வருடகால உழைப்பின் பயனாகத் தடம்பதித்து வருகிறார்கள். பட்மின்ரன் எனப்படும் பூப்பந்தாட்டத்தில் விசையுறு பூவின் திசையையும் வேகத்தையும் அதைவிட வேகமாக உள்ளத்திலே கணித்து தம் உடலை இயக்கும் ஆற்றலை இந்தத் தமிழ்ச்சிறார்கள் தமது 11 வயதிலேயே தமக்குள் வளர்த்துள்ளார்கள்.

அதன் பெறுபேறாக 84 மில்லியன் மக்கள் வாழும் யேர்மனியிலே வெறுமனே சுமார் 80.000 தமிழர்களிலிருந்து 11 வயதினருக்கான U11 ஆண்கள் பிரிவில் 1ஆம் இடத்தை கார்த்திக் ஹர்சத்குமாரும், அதே வயதினருக்கான பெண்கள் பிரிவில் 3 ஆம் இடத்தைத் தமிழி மார்க்கண்டு அவர்களும் எட்டியுள்ளார்கள். இது ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பெருமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கக்கூடிய வெற்றிச் செய்தி அல்லவா ! ஏனெனில் புலம் பெயர்ந்து வாழும் நாட்டில் எண்ணிக்கையில் மிகச்சிறியதொகையாக வாழும்நிலையிலும் எம்மிடையேயிருந்து இவ்வாறு இருவர் தமிழினத்தை அடையாளப்படுத்தியுள்ளனர்.

தனிப்பட்ட இரு குடும்பங்களின் இடைவிடாத முயற்சியையும் ஆதரவையும் இவ்விடத்தில் கட்டாயம் நாம் பாராட்டியாக வேண்டும். அதேவேளை இவர்களின் இந்த முயற்சியைப்போன்று எம்மிடையேயுள்ள ஏனைய வருங்கால சாதனையாளர்களையும் அவரவர் துறைசார்ந்து இனங்கண்டு ஒட்டுமொத்த தமிழினமாக அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உழைக்கும்பட்சத்தில், எங்கள் 80.000 பேரிலிருந்து இன்னும் பல முன்னணி நிலைச் சாதனையாளர்கள் வெளிச்சத்திற்கு வருவார்கள் என்பது உறுதி. வெறுமனே சினிமாப்பாணியிலே சர்வசாதாரணமானதாக எடுத்துக்கொள்ளாமல் இவ்விரு சிறுவர்களும் இந்த நிலையை அடைவதற்கு கடந்துவந்த 2 வருடங்களிலும் முதலிடப்பட்ட உழைப்பையும் அர்ப்பணிப்புகளையும் தமிழ்ச்சமூகம் புரிந்துகொள்ளவேண்டும். வெறுமனே இரு சிறார்களின் தனிப்பட்ட வெற்றிகளாக இதைக் கருதாது, இவர்களுக்குச் சாத்தியமானதைப்போல முயற்சி, ஊக்கம், உழைப்பு உள்ள இன்னும் பல தமிழ்ப்பிள்ளைகளுக்கும் வெற்றிகள் வாய்க்கும் என்பதில் நம்பிக்கைகொள்ளவேண்டும். அத்தோடு எமது சிறார்களை விளையாட்டுத் துறையில் தட்டிக்கொடுத்து இதை நிறுவனமயப்படுத்தி சர்வதேசதரத்தில் அவர்களை வளர்த்தெடுப்பதற்கு பொது அமைப்புகள், வர்த்தக நிறுவனங்கள் உட்பட சகல தரப்புகளும் இணைந்து செயற்படவேண்டியது அவசியமாகும். ஏனெனில் இது தமிழ் இனத்தின் அடை யாளம் மற்றும் குரல் தொடர்பானதும்கூட. உயர்ந்த இடங்களில் நின்றுகொண்டு சொன்னால் மட்டுமே தமிழரின் குரலுக்குச் செவிசாய்க்கப்படும். அதற்கான ஒரு தளமாகவும் விளையாட்டு இன்று எமக்கு அவசியமாயுள்ளது. ■

**தகவல்: துரைச்சாமி.கோணேஸ்வரன்**

# வடக்கில் என் நிலம்



படம்: சர்மிலா

கொங்கை சொரிந்து திடமேறிய யாக்கையும்,
அன்றொரு காலத்தில்
தடக்கி விழுந்து நிமிர்ந்தெழ முடியாமல்
எழுந்தோடிய தொண்ணூறுகள்
இன்றைக்கு வந்திங்கு அன்றந்த நாட்களில்
தின்ற மண் சுவையினை
சுவர்படு சன்னத்தின் குழிகளின் சாட்சியாய்
கூரைகள் கழன்ற எங்களின் கூடுகள் மீதேறி
ஆகாயம் தூவும் அக்கினி நாவினால்


பிரளயச் சுடலையின் கருநிறச் சாம்பலோடு
முன்நூறு ஆண்டுகளாய் தின்று
செரித்த சேதியை
ஊரெல்லாம் சொல்கையில்,
முன்னொரு காலத்தில்
வாலிபம் பொங்க வலம்வந்த தாத்தாவின்
ஒற்றைப் பல் மட்டுமே - எஞ்சிய
பொக்கைவாய் முழுவதும்
வடகடல். ■




**சர்மிலா வினோதினி**










25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## யேர்மனி பிராங்போர்ட் நகரில் நாடகத்தேன்றல் 2023

tik tok போன்ற செயலிகளில் பிறசித்தி பெற வேண்டும் என்பதற்காக மனணவி கற்பூரச்சட்டி எடுப்பதும் அதை கணவனை video எடுக்கச்சொல்வதும் நகைப்பாக இருந்தாலும் சிறப்பாக இருந்தது.

இறுதி நாடகமாக இயக்குனர் ஓசை இரமணின் "ஒத்திகை" நாடகம் இதுவும் ஓர் ஓரங்க நாடகம் மூன்று பாத்திரங்க ளாய் நடித்துருந்தார் திரு.இரமணன் அவர்களின் கம்பீரமான குரல் இந்த நாடகத்தின் ஓர் சிற ப்பம்சமாகும் அத் துடன் நாடகத்துறையில் பிறசித்தி பெற்ற வர் திரு.இரமணன் அவர்கள் அதனால் நாடகத்தில் அனுபவம் வாய்ந்த நடக களைஞர்களினால் விளங்கிக்கொல்ல வேண்டிய ஓர் ஓரங்க நாடகம் இந்த ஒத் திகை உண்மையில் இந்த நாடகத்தினை ப்பார்த்த எனக்கு இது ஒத்திகையாகத்தான் இருந்தது. ஆனால் அவருடைய அற்பு தமான நடிப்பு நாடகத்திற்கான நடன அசவு என அனைத்தும் சிறப்பாக வெளிப்படு த்தி இருந்தார் ஓர் சிறந்த கலைஞனுக்கு வாழ்த்துகள் பாரட்டுக்கள். மொத் தத்தில் நாடகத்தென்றல் என்றும் சிறப்பு திரு தியான் பா அவர்களுக்கு நன்றிகளும் வாழ்த் துக்களும் அத்துடன் நிகழ்ச்சி களை தொகுத்து வழங்கிய திரு.முல்லை மோகன் அவர்களுக்கும் கீர்த்தனாவிற்கும் திரு.தியான் அவர்களுக்கு பக்கபலமாய் நிற்கும் அவர் குடும்பத்தினருக்கும் என் வாழ்த்துக்களும் நன்றிகளும். ■

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உல்லாசப் பயணமும் உயிர் பலியும்...

சொத்துக்களோடும் ஆழ்கடலின் அடி யில் உறங்கச் சென்ற 'டைட்டானிக்' கப்பலை தேடிக் கண்டுபிடித்து ஆய்வகள் நடத்த யாரும் முன்வரவில்லை. காரணம் டைட்டானிக் கப்பல் கடலில் கிடக்கும் இடம் வட அத்திலாந்திக் மாகடல். நியூஸிலாந்து கரையிலிருந்து 690 கிலோ மீற்றம் தொலைவில் இருந்தமையேதான்.

சுமார் 38 வருடங்களுக்கு முன் பிரிட் டிஷ்- பிரெஞ்சு விஞ்ஞானிகள் குழு ஒன்று ரொபேர்ட் பலாட் இதன் தலைவர் 1985 செப்டெம்பர் முதல் திகதி அதிகாலை 12.45 அளவில் அவர்களின் படகிலிருந்து தொலைக்காட்சி திரையில், நீரில் மூழ்கி மறைந்து போய் விட்டிருந்த 'டைட்டானிக்' கப்பலின் (Boiler) (நீராவியந்திரம்) தென்பட்டது. குதூகலித்த பலாட் பல தடவை (பற்பல தடவைகள்) தன் சகாக் களுடன் சென்று சரிந்து வீழ்ந்து கிடந்த யானை போன்ற கப்பலை பார்வையிட்டு படம் பிடித்து வந்தார்.

இதன் விளைவாக உருவானதுதான் (Ocean Gate Expeditions) ( ஓஷியன் கேற் பயணங்கள்) வாருங்கள் நாங்கள் உங்களை திருப்பதி தரிசனத்துக்கு அழைத் துச் செல்கிறோம். காசி யாத்திரைக்கு கூட்டிப் போகிறோம். என்றெல்லாம் எம் மவர்களை கவர்வது போல 'வாருங்கள் டைட்டானிக் கப்பலின் மயான பூமிக்கு அழைத்தச் செல்கிறோம். 112 ஆண்டு களுக்கு முன் மூழ்கிப் போன டைட்டா னிக்கை நீங்கள் தொட்டுப் பார்க்கலாம். படம் பிடிக்கலாம். கட்டணம் இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர் மட்டுமே என்று விளம்பரம் வேறு.

21/2 இலட்சத்தை வெறும் சில்லறை யாக ஊதித் தள்ள விரும்பிய 6 பேர். ஸ்டாக்டன் ரஷ், ஹமீஸ், பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட பிரிட்டிஷ் பணக்கார் தாவூத் (48 வயது) அவரது புதல்வர் 19 வயதான சுலைமான், கப்பலை இயக்கும் (Ocean Gate Expeditions) பிரதிநிதி.

இந்த ஐவரும் 'கப்பல் பார்க்க' என்று அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால், தமது பயண வண்டியைவிட்டு அவர்கள் Titanice கப்பல் இருந்த இடத்தில் இறங் கவுமில்லை. வண்டியின் வெளிக்கதவு கள் திறக்கப்படவுமில்லை. 2000 பேரின் சமாதியை பார்க்க விரும்பிப் புறப்பட்ட இவர்கள் தமது வண்டியிலேயே உயிரிழந் ததாக தெரிவிக்கப்படுகிறது.

112 ஆண்டுகளுக்கு முன் போய் நிறைவேறாத கனவுகளுடன் உயிழிந்த செல்வந்தர்கள் 2000 பேரின் ஆவிகள் சும்மா இருக்குமா என்ன? தங்களைப் பார்த்து படம் பிடிக்க வந்த ஆறு கோடீஸ் வரர்களையே மூச்சுத் திணறச் செய்து விட்டனவே.

இதேபோல 2009 மே மாதம் 17 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் தென்னிலங்கை யில் இருந்து சிங்களக் குடும்பங்கள் பல முல்லைதீவுக்கு விஜயம் செய்து 'ஒரு அரசையே நடுங்க வைத்த ஒரு தலைவின் வீடு எங்கே? அவன் நடந்த காலடி மண் எங்கே?' என்று தேடினார்களாம்.

எதிர்பாராத இந்த ஜனக் கூட்டத்தை கட் டுப்படுத்த தெரியாத அரசு இப்படியான பயணங்களுக்கு தடை விதித்து. வடக்கே செல்லும் பயணிகள் புத்த வழிபாட்டுத் தலங்களுக்கும், ஆலயங்களுக்கும் மட் டுமே செல்லலாம் என்றும் உத்தரவிட்டது. விடுதலைப் புலிகளின் தலைவர் சிங்கள மக்களையோ, பௌத்த மதத்தையோ எதி ரிகளாக கருதவில்லை. மாறாக மக்களை தவறாக வழிநடத்தும் சிங்கள அரசியல் வாதிகளையே தமது எதிரிகளாக அவர் கருதினார். இதனை அந்த அப்பாவி சிங்கள கிராம மக்கள் உணந்திருப்பார்கள் போலும். ■

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தானும் ஒரு 'பாலுமகேந்திரா' எண்ட....

110 எண்டு ஒரு கமரா வந்திச்சுது. Load ing பிரச்சினை இல்லை, மேல இருக்கிற பட்டி னை இழுத்து இழுத்து அடிக்கிறது. இருவ த்தி நாலுக்கு படத்துக்கு கிட்ட எடுக்கலாம். ஆனாலும் மணவறையில படம் எடுக்கி றது ஒரு பெரிய கமராக்காரர் மட்டும் தான். அதுக்குப் பிறகு வெளிநாட்டுக்காரர் வரத்தோட SLR வரத் தொடங்க கனபேர் கமராவைத் தொழில் ஆக்கிச்சினம்.

தொண்ணூறுகளின் கலியாணம் எண்டால் கொழும்பால வரேக்க தாண்டிக்குளத்தால என்ன கொண்டராட்டியும் பிடிபடாம எப்பி டியாவது ரெண்டு பிலிம் ரோலும், கடயளா க்கு நாலு பற்றிரியும் கொண்டு வந்திடு வினம். அங்கால இருந்து இங்கால கஸ்ட ப்பட்டு கொண்டு வர "அண்ணை எங்களுக்கு ரெண்டு பற்றிரியை குடுத்திட்டுப் போங்கோ" எண்டு பெருமாளின்டை பிச்சையை அனு மார் புடுங்க, இதையெல்லாம் தாண்டிக் கொண்டுவந்து கடைசீல கஸ்டப்பட்டு கமராக் காரனைப் பிடிச்சு படம் எடுத்திட்டுக் கழுவக் கொழும்புக்கு கொண்டு போகேலாமல் நிறைய கலியாணவீட்டுப் படங்கள் இன்னும் பிலிம் ரோல் ஆகவே இருக்குது. Friend ஒருத்தன் புதுக்கமராவும் பிலிம்ரோலுமா திரியிறானாம் படம் எடுக்க ஆள் வேணுமாம் எண்டு கேள்வி ப்பட்டு , கவுண்டமணி சொன்ன advise ன் படி "தெரியாத ஒண்டில தான் முன்னுக்கு வரலாம்" எண்டு போட்டு ஓடிப்போய் உதவிக்கரம் நீட்டினன். அக்காவின்டை campus going down party ஆம் எண்டு சொல்ல முதல் முதலா கம்பஸ்/க்க காலடி வைச்சன் கமராக் காரனா. கொஞ்சம் பயந்து போன எனக்கு கையில இருந்த கமராவைக்கண்டோன்ன எங்களையும் ரெண்டு படம் எடுங்கிறீங்களோ எண்டு கேட்டு வந்த ஆக்கள் சாப்பாடும் ஜூசும் தந்திச்சினம் , எல்லாம் கமரா தந்த demand.

பள்ளிக்கூடத்தில படிக்கேக்க ஏனோ தெரி யேல்லை வகுப்பில எல்லாருமாச் சேந்து படம் எடுக்கிறேல்லை . ஏதாவது பள்ளிக்கூட விசேசம் எண்டால் prize வாங்கிறவன், drama நடிச்சவன் மட்டும் படம் எடுக்க tie கட்டிக்கொண்டு வந்து கைதட்டினவனி ட்டை படம் ஒண்டும் இருக்காது . இல்லாட்டி ஏதாவது விளையாடி இருந்தால் team photo இருக்கும் . கம்பஸில அப்பிடி இல்லை வருசத்தில மூண்டு நாலு party இருக்கும். batch photo வில இருந்து சின்னச்சி ன்ன குறூப் போட்டோ எண்டு எல்லாரும் படம் எடுக்கலாம். எல்லா பெற்றோருக்கும் ஒரே கனவு , கையில சுருளைப் பிடிச்சபடி அலுமாரீல புத்தகம் அடுக்கின பிறேமுக்கு முன்னால ஒரு படம் பட்டமளிப்பு விழா முடிய எடுத்து வீட்டில தொங்கவிட்டிட்டு வாற போற எல்லாருக்கும் காட்டிறது. யாழ்ப்பாணத்தில அப்ப பிலிம் ரோலும் பற்றிரியும் பவுண் விலை வித்திச்சுது. இந்த விலைக்கு எல்லாம் வாங்கி படம் எடுத்திட்டு கொழும்புக்கு கழுவக் குடுத்தால் பாதிப்படம் வராமலே போயிடும், மிச்சப் படம் வர பாதி வருசம் போயிடும். எல்லாக் கமராக்காரரும் அப்ப producers தான். கம்பஸில ஏதும் விசேசம் எண்டால் கடன் வாங்கி கமராவுக்கு பிலிம்ரோல் போட்டு படம் எடுத்திட்டு, எனக்கு ஒரு கொப்பி இவனக் கொரு கொப்பி எண்டவனை நம்பி extra உழிலக்கும் ஓடர் குடுத்து காசையும் கட்டி கொழும்புக்கு அனுப்பீட்டு படம் வர எனக்கு வேணாம், இதில நான் வடிவாயில்லை எண்டு சொல்லிற சிலராலேம், படம் வரேக்க கம்பஸ் முடிஞ்சு காணாமல் போற பலராலேம் முதல் இழந்து, படம் கடழி ஆகி இனிப் படமாக எடுக்கிறேல்லை எண்டு தொழிலைக் கைவி ட்டாக்களும் இருக்கினம்.

4 R சைசில வாற குறூப் படத்தில இது நான் அது அவன் எண்டு கண்டு பிடிக்கி றதே பெரிய காரியம். என்ன தான் வீட்டில அல்பம் இருந்தாலும் எப்பவாவது ஒண்டாப் படிச்ச எவனாவது ளாயசந பண்ணிற படத் தில நான் இருக்கிறனா நான் பாத்ததுகள் இருக்கா எண்டு பாத்து பஙற சந்தோசமும், CD வாங்கிக் கேக்கிற பாட்டிலும் பாக்க ரோட்டில போகேக்க எங்கயோ ஒரு மூலையில போடிற பழைய பாட்டுக் கேக்கேக்க வாற சந்தோசமும் எப்பவுமே தனிரகம். ■








## நடிகர் திலகம் சிவாஜி, ஜெயலலிதாவிடம்

# இனிமேதான் நீ காதலிக்கப் போறே நீதான் சொல்லணும் என்றார்!

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை 1967 ம் ஆண்டு பொம்மை சினிமா இதழுக்காக, அன்றைய முன்னணி நாயகி ஜெயலலிதா ஒரு நேர்காணல் செய்துள்ளார்.

? ஜெயலலிதா: உங்க பெயருக்கு முன்னாலே சிவாஜின்னு ஒரு பட்டம் சேர்ந்திருக்கிறதே, அது எப்படி வந்தது?

சிவாஜி: ஏழாவது சுயமரியாதை மகாநாட்லே சத்ரபதி சிவாஜி நாடகம் நடந்தது. பெரியார் அவர்கள் மகாநாட்டுக்கு தலைமை வகிச்சாங்க. நாடகத்திலே சிவாஜியாக நடிச்ச என்னைப் பார்த்து பாராட்டிவிட்டு, சிவாஜிங்கிற பட்டத்தையும் கொடுத்தாங்க. அன்னேலேர்ந்து சிவாஜி கணேசனாயிட்டேன்.

? ஜெயலலிதா: லைலா – மஜ்னு, ரோமியோ – ஜ/லியட் போன்ற இலக்கியங்கள்ளே வரும் காதலர்களைப் பற்றி படிச்சிருப்பீங்க. அந்த மாதியான காதலருங்க இருந்திருப்பாங்கன்னு நீங்க நினைக்கறீங்களா?

சிவாஜி: காதலிச்சா அந்த மாதிரி காதலிக்கணும் என்கிறதுக்காகத்தான் எழுதியிருக்காங்க. கொஞ்ச நாள் காதலிச்சிட்டு, கைவிட்டுட்டுப் போகக் கூடாது. காதல் என்பது கடைசிவரைக்கும், உயிர் போனா கூட இருக்கணும்னு சொல்றதுக்காகதான் இது. நாடகமும்,சினிமாவும், இந்த மாதிரி கதைகளும் வெறுமே படிச்சிட்டு விடறதுக்காக இல்லே.

? ஜெயலலிதா: அம்மாதிரியான காதலர்களை இப்போதுள்ள உலகத்திலே காண முடியும்னு நம்பறீங்களா?

சிவாஜி: நான் காதலிச்சது கிடையாது. இப்போ நீ தனி ஆள். இனிமேதான் நீ காதலிக்கப் போறே. நீதான் சொல்லணும்.

? ஜெயலலிதா: சின்ன வயசிலே நீங்க நாடக மேடையில் நடிக்க ஆரம்பிச்சீங்க-இல்லையா? அப்போ ஏதாவது நினைச்சதுண்டா.அதாவது எதிர்காலத்தை பற்றி. இப்படி ஒரு நடிகரா வருவோம்னு நினைச்சதுண்டா?

சிவாஜி: இப்படி ஒரு நடிகனாகிவிடுவேன்னு கனவுகூட கண்டதில்லை. நடிக்க வேண்டும்கிற ஒரே ஆர்வம் தான் என்னை மேடைக்கு துரத்திச்சு. தவிர, வருங்காலத்தைப் பற்றியோ,எதிர்காலத்தைப் பற்றியோ



நினைக்க முடியாத நிலை. அப்போது அடுத்தவேளை சோத்துக்கே என்ன செய்யறது? எங்கே போறது என்ற நிலையில் எதிர்காலத்தைப் பற்றி நான் நினைக்கலே. அதுக்கு நேரமே கிடைக்கலேன்னு சொல்வேன்.

? ஜெயலலிதா: தமிழ் படங்கள் இப்போ முன்னேறியிருப்பதா நினைக்கிறீங்களா?அல்லது தரம் குறைந்து விட்டதாக எண்ணுகிறீர்களா?

சிவாஜி: எல்லாத் துறையிலும் நிச்சயமாக முன்னேற்றம் அடைஞ்சிருக்கு. அதே சமயம் சில படங்கள் மக்களது ரசனையை குறைச்சிடும் போலிருக்கு. இந்த மாதிரிப் படங்கள் நூற்றுக்கு இருபத்தஞ்சு இருக்கும். ஆக நாம் மேலே ஏறினால்,இந்தப் படங்கள் கொஞ்சம் நம்மை கிழே இழுத்து விட்டுது.

? ஜெயலலிதா: எப்படி?

சிவாஜி: இப்ப நீங்கள்ளாம் கால் சராய் போட்டு நடிக்க வந்துட்டதனாலேதான்.

? ஜெயலலிதா: தயாரிப்பாளர்கள் அப்படி போடச் சொல்றாங்களே.

சிவாஜி: ஜனங்களோட வீக்னஸை தயாரிப்பாளர்கள் பயன்படுத்திக்கிறாங்க. நீங்க இன்னும் கொஞ்சம் பிகு வாக இருக்கலாம்.

? ஜெயலலிதா: பிகுவாக இருந்தால், நீங்க வேண்டாம்னு சொல்லிவிடுவீங்களே. புதுசா வரும் நடிகைங்க என்ன செய்வாங்க? எதிர்க்க முடியுமா?

சிவாஜி: தப்பு. கால்சராய் போட மாட்டோம்னு சொன்னோம். வேண்டாம்னு தயாரிப்பாளர் சொல்லிட்டாருன்னு வெளியே தெரிஞ்சா, தயாரிப்பாளரைத்தான் திட்டுவாங்க.

? ஜெயலலிதா: சில நாவல்கள் படிக்கிறோம், கதைகளைக் கேட்கிறோம். ஆஹா! அந்த மாதிரி வேஷம் நமக்கு வரக் கூடாதா? கிடைக்காதா? என்று நினைக்கிறோம். அந்த மாதிரி நீங்க எதிர்பார்த்து நடிச்ச வேஷம் ஏதேனும் இருக்கா?

சிவாஜி: கட்டபொம்மன் வேஷம் அப்படிப்பட்டது. கட்டபொம்மன் கதையை தெருக்கூத்தா நான் பார்த்தேன். நான் வீட்டை விட்டு நாடகத்தில் போய்ச்சேர தூண்டுதலாக இருந்ததே இந்த கட்டபொம்மன் கதைதான்.

? ஜெயலலிதா: உங்களுக்கு லதாவின் பாட்டு என்றால் ரொம்பவும் பிடிக்கும் போலிருக்கே?

30 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

29 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நடிகர் திலகம் சிவாஜி, ஜெயலலிதாவிடம்

சிவாஜி: பிடிக்காம இருக்குமா. அது மட்டுமா? சமீபத்திலே நான் ஒரு நியூஸ் கேள்விபட்டேன். இண்டர்நேஷனல் லெவல்லே உலகம் பூராவும் ஒலிபரப்பப்பட்ட பாடகர்களின் வரிசையில், லதாவின் பாட்டுக்கள் நாள் ஒன்றுக்கு இருபது மணிக்கும் மேலே ஒலிபரப்பாகுதுன்னு சொன்னாங்க. உலகிலேயே எந்தப் பாடகிக்கும் இல்லாத தனி கவுரவம் என் தங்கச்சிக்கு இருக்கு.

? ஜெயலலிதா: இப்போ புதுசா ஒரு பிரச்சினை தலை தூக்கியிருக்கு.முத்தக் காட்சிகளை அனுமதிப்பதா இல்லையான்னு? நீங்க என்ன சொல்றீங்க?

சிவாஜி: சே..சே..வெட்கக்கேடு. முத்தம் கொடுக்கிறதை காட்டவே கூடாது. முத்தம் கொடுக்கிறது மாதிரி நடிக்கணும். மூடிக்காட்டுவதுதான் கலை. பச்சையா உள்ளதை அப்படியே காட்டினா அது கலையாகாது. அதனால் முத்தம் கொடுப்பதையெல்லாம் திரையிலே காட்டக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

? ஜெயலலதா: ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் சில சம்பவங்கள் மறக்கமுடியாததாக அமைந்துவிடும். அந்த மாதிரி உங்க வாழ்க்கையிலே ஏதாவது நடந்திருக்கா?

சிவாஜி: எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் ஆசிய ஆப்பிரிக்க படவிழாவின் போது நடந்தது. அன்னிக்கு விழாவுக்கு வந்த படங்களின்



ரிசல்ட் சொல்றாங்க. நான் பின்னாலே உட்கார்ந்திருந்தேன். அங்கிருந்தவங்க எல்லாம் என்னை ஏதோ டெக்னீசியனு நினைச்சிருந்தாங்க. அங்கே வந்திருந்தவங்களெல்லாம் பெரியவங்க, உயரத்திலும் ஆறடி. அங்கே பல பெரிய நாடுகளிலிருந்து பல கலைஞர்கள் கூடியிருந்தாங்க. நீதிபதிகள் எல்லோரும் வந்தாங்க. கட்டபொம்மன்தான் சிறந்த படம். கட்டபொம்மனா நடிச்ச நான்தான் சிறந்த நடிகன்னு சொன்னாங்க. என் பேரைச் சொல்லி கூப்பிட்டாங்க. நான் எழுந்து நின்னேன். வாழ்க்கையில் நான் எதற்கும் சாதாரணமா மசிஞ்சு கொடுக்காதவன். ஆனா அன்னிக்கு கெய்ரோவில் நடந்த அந்த சம்பவம் என்னை அசத்திட்டது. என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பத்மினி என்னை தாங்கிப் பிடிச்சிட்டாங்க. இல்லாட்டி நான் நிச்சயம் விழுந்திருப்பேன். நான் என்னையே மறந்து உணர்ச்சி வசப்பட்டது அந்த ஒரு நாள்தான்.

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## திருமணத்திற்கான உங்கள் தேர்வை....

தாவணி பாவாடை போட்டு, கைநிறைய வளையல்கள் அணிந்து தம்மை அழகாக அலங்கரித்துக் கொண்டு பெண்களும், அதேபோல் பட்டு வேட்டியுடன் மார்பிலே தங்கச் சங்கிலி தாளமிட மேலங்கி அணியாது ஆண்களும் சென்ற இறுதிநாள் திருவிழா, தீர்த்தம், அல்லது தீமிதிப்புச் சடங்கு வயதுக் கவர்ச்சிக்குக் களமாக அமைந்திருந்தன. திருவிழாக் கடைகளில் எத்தனை கண்கள் மோதின. எத்தனை இதயங்கள் பரிமாறின என்பதை எண்ணிக்கையில் அடக்க முடியாது.

பழந்தமிழ் இலக்கியங்களும் விழாக்களும் ஆண், பெண் உறவு கலத்தலும் பற்றி எடுத்துக் காட்டுகின்றன. சங்க இலக்கியத்திலே தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காவிரிப் பூம்பட்டினத்தை விழாக்கோலங் கொள்ளச் செய்து காதல் விழா நகரமாக மாற்றி, காதல் திருவிழாவைக் கொண்டாடியுள்ளான் என்று கூறப்பட்டுள்ளது. இவ்விழா காமதேவனுக்காக திங்கள் விழாவாக இருபத்தெட்டு நாட்கள் கொண்டாடப்பட்டது. கரிகால் வளவன் மகள் ஆட்டனத்தியும், ஆதிமந்தி என்னும் சேரனும் காதல் கொண்டு, இருவரும் காவிரிப்பூம் பட்டினத்தில் காதல் திருவிழாவின் போது புனலாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது, ஆதிமந்தியைக் காவிரி ஆற்றுநீர் அடித்துச் செல்லவே ஆதிமந்தியைத் தேடி ஆட்டனத்தி காவிரி நதிக்கரை வழியாகச் செல்கின்றாள் இப்போது அங்கே காமனுக்கு வில்விழா நடந்து கொண்டிருந்ததாக ஆதிமந்தி தன் பாடலில் குறிப்பிடுகின்றாள். காமவேள் விழாவின்போது காதலர்கள் களித்து விளையாடுவதை

> **"மல்கிய குருத்தியுள் மகிழ்துணைப்**
> **புணர்ந்தவர்**
> **வில்லவன் விழவினுள்**
> **விளையாடும் பொழுதன்றோ" என்றும்**
>
> **"காமவேள் விழாவயின்**
> **கலங்குவள் பெரிதென**
> **ஏமுறு கடுந்திண்டேர் கடவி**
> **நாம் அமர் காதலர் துணைதந்தார்**
> **விரைந்தே"**

என ஊரில் காமவேள் விழா நடப்பதைக் கண்டால் தலைவி கலங்குவாள் எனக் கருதிய தலைவன் திண்டேரேறி வந்தாகத் தோழி குறிப்பிடுவதாகவும் காமவேள் விழாவின்போது கணவனைப் பிரிந்த மகளிர் வருந்துவர். சில ஆடவர்கள் பரத்தையருடன் கூடியாடுவர்.

> **"உறலியாம் ஒளிவாட**
> **உயர்ந்தவன் விழவினுள்**
> **விறலிழை யாவரோடு**
> **விளையாடுவான் மன்றே" எனவும்**

கலித்தொகையில் இக்காதல் விழா பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. எனவே நாம் காதல் விழாக்கள் நடத்திய மக்கள். ஜெர்மனியர் போல் Love Parade நடத்த முடியாது. இவ்வாறான நிகழ்ச்சிகள் நடப்பதைக் கண்டு மனம் விரும்புவோம். எமது இளையவர்களும் இப்போது போல் சிகையலங்கார நிலையம் சென்று சிகையை அலங்கரித்து அழகான ஆடைகள் புதிதாக கொள்வனவு செய்து கண்கவரும் இளையோராக களித்திருக்க இசைநிகழ்ச்சிகளுக்குச் சென்று வரட்டும். வியாபார ஸ்தாபனங்களும் பொலிவடையட்டும். இப்போது மீட்டுவோம்

"எது நடந்ததோ நன்றாகவே நடந்தது. எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்" இதேபோல் கீதாசாரம் முழுவதையும் பார்ப்போம். இந்த மாற்றம் உலக நியதியாகும். 10 விரல்களை நம்பிப் புலம்பெயர்ந்தோம். இங்கு உழைத்தோம், இங்கு செலவு செய்கின்றோம். இன்று நாம் வாழும் பூமியில் நாளை நாம் இல்லை. அது வேறு யாருடையதாகிவிடுகிறது. பாடகர்களுக்கு அள்ளிக் கொடுப்பது. இந்தியக்காரன் அள்ளிக் கொண்டு போகின்றான் என்னும் போது எம்முடைய இயலாமையையே இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. அவரவர் திறமையைத்தானே நாம் தேடுகின்றோம். நாம் ஏன் அதைவிடத் திறமையை வளர்த்துக் கொள்ளக் கூடாது. அதற்கு முனைந்து நிற்போம். அப்போது எம்மைத்தேடி வேற்றுநாட்டினர் வருவார்கள். அள்ள அள்ள ஊற்றெடுக்கும் கிணறு. போற்றப் போற்ற ஏற்றம்பெறும் வாழ்வு.

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## உன்னை ஊனமாக்கிறதா?

வைப்பதைப் போன்று, நீங்கள் சொல்லுகின்ற வார்த்தைகளிற்கு ஏற்றால் போல், ஏற்கனவே பதிந்து வைக்கப்பட்டிருக்கி ன்ற நிகழ்தகவுகளை வைத்துக்கொண்டு, நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு, அனுபவங்களை வைத்துக்கொண்டு,

பதிவுகளை வைத்துக்கொண்டு,புதிய விடயங்களை உங்களுடைய சிந்தனையில் தோன்று கின்ற அந்த நிகழ்ச்சிக்கு ஏற்றால் போல் மாற்றி, புதிதாக உருவாக்கித் தருவது தான் இந்த AI என்கின்ற தொழில்நுட்பமாகும். இது பலருக்கு உதவியான ஒரு விடயம். உதாரணத்திற்கு தொழிலில் முன்னேற வேண்டும் என்கின்ற ஒருவருக்கு, தன்னுடைய சிந்தனையை விரிவாக்கிக் கொடுப்பதற்கு உதவி செய்யும். கை ஊனமான ஒருவருக்கு, அவரின் சிந்தையில் இருக்கின்ற ஓவியத்தை வரைந்து கொடுப்பதற்கு உதவி செய்யும். புதிய சிந்தனை மற்றும் வார்த்தை ஜாலங்கள் தெரிந்த ஒருவருக்கு அதை கவிதை நயமாக அல்லது கதையாக மாற்றி கொடுக்க உதவி செய்யும். ஆம் இன்னும் ஒரு படி மேலே சென்று,வடிவாக புரிந்து கொள்ள வேண்டும் என்றால். உங்கள் வீட்டு சமையல் அறைக்குள் இருக்கின்ற காய்கறிகளை வெட்டுகின்ற சிறிய கத்தியை போன்று, வீட்டின் கொல்லைப்புறத்தில் இருக்கின்ற விறகுகளை வெட்டுகின்ற பெரிய கோடாலி போன்றும், இந்த AI யும் பல பரிமாணத்தில் பல கூரான ஆயுதங்களாக காணப்படுகின்றது.

ஆனால் ஆயுதங்கள் வைக்கப்பட்டு இருக்கின்ற இந்த அறைக்குள், குழந்தை பிள்ளையோ, மனநிலை குறைபாடான ஒருவரோ சென்றால்,அது அவரின் உயிரை மட்டுமல்ல சமுதாயத்தின் உயிரையும் சேர்த்து பாதிக்கும். இந்த AI என்கின்ற தொழில்நுட்பம் சிறந்த, மனிதனுடைய சிந்தனையை வெவ்வேறான பரிமாணத்தில் உயர்த்தக்கூடிய ஒரு பிரம்மாண்டமான தொழில்நுட்பம். ஆனால் இந்த தொழில்நுட்பம் மணித்தியாளத்திற்கு ஒளியின் வேகத்தில் பயணிக்க கூடிய ஒரு வாகனத்தைப் போன்றது.

இந்த வாகனத்தை பயணிப்ப தற்கு கண்டிப்பாக சரியான ஓட்டுனர் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட வேண்டும்,என்கின்ற சட்டதிட்டம் வந்ததன் பின்பாக, அவர்களின் கையில் மட்டும் இந்தத் தொழில்நுட்பம் தவலுமேயா னால், அடுத்த தலைமுறை நேராக வேகமாக நடக்கும் அல்லா விட்டால், மிக விரைவில் அகிலம் முழுதும் அம்மணம் இலவசம்.






# கமல்,அஜித்,சூர்யா இணையும் படம்?

இயக்குநர் கௌதம் மேனன் இயக்கத்தில் கமல் நடிப்பில் 2006 ஆம் ஆண்டு வெளியான வேட்டையாடு விளையாடு திரைப்படம் மிகப்பெரிய வெற்றிப் படமாக அமைந்தது. இந்நிலையில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த படம் டிஜிட்டலில் புத்துருவாக்கம் செய்யப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் 70 திரைகளில் வெளியானது .

இந்த படத்தின் மீள் வெளியீடு தொடர்பில் பேசிய இயக்குநர் கௌதம் மேனன் விரைவில் வேட்டையாடு விளையாடு 2 படத்துக்கான வேலைகள் தொடங்கும். கமலிடம் இது குறித்து பேச உள்ளேன்.

எனது பொலிஸ் கதாபாத்திரங்களான சூர்யா நடித்த அன்பு செல்வன், அஜித் நடித்த சத்யதேவ் மற்றும் கமல்ஹாசன் நடித்த ராகவன் ஆகிய கதாபாத்திரங்களை இணைத்து ஒரு படத்தில் கொண்டுவரும் விதமாக ஒரு திட்டம் உள்ளது எனக் கூறியுள்ளார்.

# மகாராஜாவான விஜய் சேதுபதி

தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் என பிஸியாக நடித்து வருகிறார் விஜய் சேதுபதி.நாயகனாக மட்டுமல்லாது வில்லனாகவும் அசத்தி வருகிறார்.

தற்போது குரங்கு பொம்மை பட இயக்குனர் நிதிலன் இயக்கத்தில் தனது 50ஆவது படத்தில் நடித்து வருகிறார். அனுராக் காஷ்யப், நட்டி (நட்ராஜ்), மம்தா மோகன்தாஸ், அபிராமி, அருள்தாஸ், முனிஷ்காந்த், பாய்ஸ் மணிகண்டன், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன், சரவணன் சுப்பையா, எஸ்.எஸ்.ஸ்டான்லி, கல்கி, காளையன் மற்றும் இன்னும் பலர் நடிக்கிறார்கள்.

காந்தாரா பட இசையமைப்பாளர் அஜனீஷ் லோக்நாத் இசை அமைக்கிறார். பேஷன் ஸ்டுடியோஸ் மற்றும் தி ரூட் நிறுவனம் இணைந்து இப்படத்தை தயாரிக்கின்றனர்.

# ஏன் திருமணம் செய்யவில்லை?


கடந்த 2002ஆம் ஆண்டில் வெளியான ஜெயம் படத்தில் ஜெயம் ரவியுடன் இணைந்து நடித்தவர் சதா. இந்தப் படம் இவருக்கு சிறப்பான வரவேற்பை கொடுத்தது. தொடர்ந்து விக்ரம் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் ஜோடி சேர்ந்து நடித்து பிரபலமானார் சதா.

தன்னுடைய சமீபத்திய பேட்டியில் 39 வயதாகியும் தான் இதுவரை திருமணம் செய்யாததற்கான காரணத்தை சதா வெளிப்படுத்தியுள்ளார்.

திருமணம் செய்துக் கொண்டால் நம்முடைய சுதந்திரம் பறிபோய்விடும் அதனால்தான் திருமணம் குறித்து யோசிக்கவில்லை திருமண பந்தத்தில் புரிதல் ஏற்படலாம் அல்லது ஏற்படாமல் போவதற்கும் வாய்ப்புகள் அதிகம்.

திருமணம் செய்து கொண்டால் என்னுடைய ஆசைகளை தொடர முடியாமல் போகலாம் என்று சதா தன்னுடைய பேட்டியில் கூறியுள்ளார்.





# நயன்தாராவிடம் ஜாக்கிரதையாக இருங்கள்

அட்லி இயக்கத்தில் ஷாரூக்கான் நடித்துள்ள ஹிந்தி படம் ஜவான். இந்த படத்தில் அவருக்கு ஜோடியாக நயன்தாரா நடித்திருக்கிறார். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியானது.

அதில் நயன்தாரா ஆக்‌ஷன் காட்சிகளில் நடித்திருப்பது தெரியவந்தது. இந்த படத்திற்கு வாழ்த்து தெரிவித்திருந்தார்.

நயன்தாராவின் கணவரும், இயக்குநருமான விக்னேஷ் சிவன். அதையடுத்து அவருக்கு ஷாரூக்கான் அளித்த பதிலில், உங்கள் அன்புக்கு மிக்க நன்றி. நயன்தாரா அருமையானவர். ஆனால் அவர் தற்போது உதைப்பதற்கும் கற்றுக் கொண்டுள்ளார்.

அதனால் அவரிடத்தில் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள். ஏற்கனவே இது உங்களுக்கு தெரியும் என்று நினைக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். அதற்கு விக்னேஷ்சிவன் ஒரு பதில் கொடுத்து இருக்கிறார்.

நீங்கள் சொல்வது உண்மைதான். நான் நயன்தாரா விஷயத்தில் எச்சரிக்கையாகவே இருந்து வருகிறேன். அதே நேரத்தில் காதல் மன்னனிடம் இருந்து அவர் நன்றாக காதல் செய்யவும் கற்றுக் கொண்டார் என்று தெரிவித்திருக்கிறார்.






செல்வி தரணிகா பத்மபாதனின்

பரத நாட்டிய அரங்கேற்றம்

28.10.2023 சனிக்கிழமை



சலங்கை ஒலி நாட்டிய பள்ளி அதிபர் திருமதி சாவித்திரி சரவணன். **M.A.M.Phil in dance** அவர்களின் மாணவியும் திரு.திருமதி. பத்மபாதன் அவர்களின் புதல்வியுமான செல்வி. தரணிகா அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம். 28.10.2023 யேர்மனியில் **Herne** நகரில் இடம்பெற உள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்குன்றோம்.

28.10.2023 Gaststätte Volkshaus Röhlinghausen
Am Alten Hof28 | 44651 Herne Germany

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.


Jasmine Silk House
ஆடைகளின் ராணி
கேவலார் புனித மாதா கோவில்
திருவிழாவை முன்னிட்டு
12.08.2023 சனிக்கிழமை
தேவாலய வளாகத்தில் Jasmine Silk House வழங்கும் அதிரடி மலிவு விற்பனை!
பட்டுச்சேலை 30 €
பெண்கள் சேலைகளுக்கான பாதவணி 10 €
இன்னும் பல அதிரடி மலிவு விலைகளில்.
'என்றும் புதியது உங்கள் தெரிவுக்கு உகந்தது'
Tel: 02102 844744
HP: 0173 1937 325
"Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen


Wuppertal நகரில்...
Asia Lebensmittel
மாதத்தில் முதல் வாரத்தில் புதன்கிழமை முதல் சனிக்கிழமை வரை மளிகைப்பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
மரக்கறி வகைகளுக்கும்
கடல் உணவு வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்
Asia Lebensmittel
Getränke Tabak Süßigkeiten
+49 176 62728598 | 020289012114
Kaiserstraße 16, 42329 Wuppertal, Germany


PIRRUNTHA SILKS
Exclusive Indian Clothing & Jewelry
Stuttgart நகரில்...
SALE
கேவலார் புனித மாதா கோவில்
திருவிழாவை முன்னிட்டு
12.08.2023 சனிக்கிழமை
தேவாலய வளாகத்தில்
எமது மாபெரும் அதிரடி மலிவுவிற்பனை!
Ludwig str.87a 70197 Stuttgart
Tel: 0711 615 8976/ 0170 334 4059


RE/MAX
வீடு வாங்க விற்க
Buy & sell property
Sakthiya Nagaselvam Immobilienmaklerin IHK § 34c
உலகின் முன்னணி நிறுவனமான Remax அனுபவமிக்க முகவர் ஊடாக (Tamil, German, English)
எளிய வழியில் உரையாடி உங்கள் கனவு இல்லத்தை நினைவாக்குங்கள்.
ஜேர்மனியில் வீடு விற்க விரும்புகின்றீர்களா?
வீடு வாங்க விரும்புகின்றீர்களா?
உங்கள் சொந்த வீட்டின் பெறுமதியை அறிந்து கொள்ள விரும்புகின்றீர்களா?
வீடு வாங்குவதற்குண்டான வங்கிக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?
மிக இலகு வழியில் வீட்டுக்கடன் பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையுடன் கூடிய அனைத்து வழிகளிலும் பெற்றுத்தரப்படும்.
IHRE IMMOBILIE VERKAUFEN?
World No1 Real Estate Agent
மேலதிக விபரங்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:
M: +49 176 32329957 | M: +49 52130515180 | E: sakthiya.nagaselvam@remax.de
www.nagaselvam-remax.de


akr
VISUALIZERS
Photography
AKRVISUALIZERS
+ 49 162 803 1647
akrvisualizers
akrvisualizer@gmail.com
Asselner Hellweg 118 44319 Dortmund


STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.
StaR Impex : Inh : K.Sivasubramaniam
Tel: 0231 860 26 96
AGAM
அகம்
Nila
Double Horse
Aachi
BTM
Rabeena
Franziusstrasse 150 (TOR3) DE -44147 Dortmund
Tel: 0231/8602696| Fax: 0231/8602698